Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள்-12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-29 | 14-09-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -209

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247



## இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும்

### - இந்திய கடற்படைத் தளபதி உறுதியளிப்பு

இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் பூரண ஒத்துழைப்பு மேலும் கிடைக்குமென இந்தியக்கடற்படைத்தளபதி அட்மிரல் அருட்பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவின் கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல், தயாசந்தகிரியை இந்தியக் கடற்படைத் தளபதி நேற்று சந்தித்து உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.

கடற்படைத் தலைமையகத்தில் நடந்த இந்தச் சந்திப்பின் போது இலங்கை, இந்தியக் கடற்படைத் தளபதிகள் இரு நாடுகளின் கடற்படை நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

இவர் பிரதி இராணுவத் தளபதியையும்



(12 ஆம் பக்கம் பார்க்க)

### - கந்தளாயில் ஊர்காவற்படையினரின் -

## ஆயுதங்களைப் பறிக்க முயன்ற இராணுவ அதிகாரி சுட்டுக் கொலை!

கந்தளாயில் ஊர் காவற்படையினரிடம் இருந்து துப்பாக்கிகளை பறித்துச் செல்ல முற்பட்ட இராணுவ அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். ஊர்காவற் படையினர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் திருகோணமலை கந்தளாய் 92 ஆம் கட்டையிலுள்ள ஊர்காவற் படையினரின் காவல் அரண் ஒன்றில் நடந்துள்ளது.

நேற்று அதிகாலை1.30 மணியளவில் வான் ஒன்றில் சென்ற மூன்று இராணுவத்தினர் குறித்த காவலரணில் கடமையில் இருந்த ஊர்காவற் படையினரின் துப்பாக்கிகளை பறித்துச் செல்ல முற்பட்டனர்.

இதன் போது ஏற்பட்ட மோதலில் (12 ஆம் பக்கம் பார்க்க)

### - அமெ. பயங்கரவாத எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளர் -


# பிளாக்கின் மதிப்பீடு யதார்த்தத்திற்கு மாறானது

# தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்

## பாராளு. உறுப்பினர் இரா.சம்பந்தன் கண்டனம்


(கொழும்பு)

**அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாத எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளரும், தூதுவர் அந்தஸ்த்துடன் கூடியவருமான கொபர் பிளாக் யூகத்தின் அடிப்படையில் புலிகளுக்கு எதிராக வெளியிட்ட மதிப்பீட்டை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளு. உறுப்பினர் ஆர்.சம்பந்தன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். அத்தோடு பிளாக்கின் நடு நிலைமை பற்றியும் கேள்வி எழுப்பியுள்ளார்.**



இது தொடர்பாக சம்பந்தன் அவர்கள் மேலும் சுட்டிக் காட்டுகையில், இலங்கையில் இடம்பெறும் தீங்கான நிகழ்வுகள் அனைத்திற்கும் விடுதலைப்புலிகளே மூலகாரணம் என்று ஊகத்தின் அடிப்படையில் தூதர் பிளாக் தெரிவித்திருக்கும் கண்டனக்கூற்றைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாத எதிர்ப்புக்கான ஒருங்கிணைப்பாளர் தூதர்திரு. ஜே.கொ.'பர் பிளாக், கொழும்பில் அண்மையில் இலங்கை



(12 ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்து தூதுவர் தலைமையிலான குழு யாழ். இராணுவத்தளபதிகளுடன் சந்திப்பு

இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் சூசன் பிளான்கார்ட் மற்றும் நெதர்லாந்துத் தூதரகத்தின் முதன்மைச்செயலாளர் ஆகியோருக்கும் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதிகளுக்குமிடையான முக்கிய சந்திப் பொன்று நேற்றுமுன்தினம் பலாலி இராணுவத் தலைமையகத்தில் இடம் பெற்றுள்ளது.

திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்.மாவட்ட பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் வருகைதந்த நெதர்லாந்து தூதுவர் குழுவிற்கும், படைத்தரப்பிற்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

### - குழாய்க்கிணறு வெட்டும் முயற்சியில் -

## சகதியில் மூழ்கி இறந்த தொழிலாளியின் சடலம் மீட்பு

அச்சுவேலி மடத்தடிப்பகுதியில் குழாய்க்கிணறு தோண்டுகையில் சகதியுள் மூழ்கிக் காணாமற் போன தொழிலாளி நேற்று அதிகாலை சடலமாக மீட்டெடுக்கப் பட்டுள்ளார்.

ஆனந்தன் என்றழைக்கப்படும் ஐந்து பிள்ளைகளின் தந்தையான சபாரத்தினம் இரத்தினானந்தம் (வயது -37) என்பவரே உயிரிழந்த தொழிலாளியாவார்.

நீண்ட நேரத் தேடுதலின் பின்னர் நேற்று அதிகாலை 2 மணியளவினில் இவரது சடலம் மீட்புப்பணியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. சுமார் 30 அடி ஆழமான சகதிப்பகுதியினுள் இவரது சடலம் காணப்பட்டதாக மீட்புப் பணியாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே மேற்படி சம்பவம் தொடர்பான செய்தி நாளிதழ்களில் வெளியானதையடுத்து நேற்று நாள் முழுவதும ஆயிரக் கணக்கான பொதுமக்கள் இக் கிணற்றினைப் பார்வையிட வருகை தந்தவண்ணமிருந்தனர். (27)

## சமாதானச் செயலகப் பணிப்பாளர் தென்பகுதி ஊடகவியலாளர் சந்திப்பு!

(அலுவலக செய்தியாளர்)

சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் அவர்களுக்கும், தென் இலங்கை ஊடகவியலாளருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று சமாதானச் செயலகத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## தேசியக்கொடியேற்றலுடன் தியாகி திலீபன் நினைவுநாள் நிகழ்வுகள் நாளை ஆரம்பம்

தியாகி லெப். கேணல் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நாளை தேசியக் கொடி யேற்றலுடன் எழுச்சிப் பூர்வமாக ஆரம்பமாகவுள்ளது. மாவீரர் மண்டபங்கள், பொது நிறுவனங்கள், சங்கங்கள், கழகங்கள், பாடசாலைகள், விடுதலைப்புலிகளின் துறைசார் அலுவலகங்கள் என்பனவற்றில் நாளை காலை 9.55 மணிக்குப் பொதுச்சுடரேற்றித் தேசியக் கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். இதனையடுத்துத் தியாகி லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கு சுடரேற்றி, மாலையிட்டு மலர் தூவி அகவணக்கம் செலுத்தப்படவுள்ளதுடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)



### தியாகி திலீபனின்திருவுருவப்படம் இணைப்பு

**தியாகி லெப்.கேணல் திலீபனின் வர்ணத்திருவுருவப் படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக் கப்பட்டுள்ளது.**

### அடுத்தமாதம் முதல்

## முகமாலை ஓமந்தை சாவடிகள் மாலை 6.30 வரை திறக்கப்படும்

முகமாலை, ஓமந்தை சோதனைச் சாவடிகளுடான போக்குவரத்து நேரத்தை ஒருமணி நேரம் நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனடிப்படையில் முகமாலை மற்றும் ஓமந்தை சோதனைச் சாவடிகள் எதிர்வரும் முதலாம் (12 ஆம் பக்கம் பார்க்க)

### பூநகரிப் பிரதேசத்தில்

# லெப்.கேணல் தியாகி திலீபன் நினைவாக

# சிரமதானம், உண்ணாவிரதத்திற்கு ஏற்பாடு

லெப் கேணல் தியாகி திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பூநகரி கடற்புலிகளின் பிரதேசத்திற்குட்பட்ட வர்த்தக சங்கத்தினருக்கு இடையேயான கலந்துரையாடல் பூநகரி கடற்புலி பொறுப்பாளர் அமுதனின் ஏற்பாட்டில் வர்த்தக சங்கத் தலைவர் யெ.ரவியின் தலைமையில் ஆரம்பமானது. இக்கலந்துரையாடலில் பூநகரிக்கிராம சபைக்குட்பட்ட வாடியடிப்பிரதேசம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன் 24,25,26 ஆம் திகதி வாடியடியில் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை பூநகரி நல்லூர் வட்டசெயலகத்தில் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் வேந்தன தலைமையில் இது தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு ஆரம்பமானது.

இக் கலந்துரையாடலில் சிரமதானமும், உண்ணாநோன்பும் ஏற்பாடு செய்யப்பட்டது. 24.09.2004 தம்பிராய் அ.த.க பாடசாலையிலும், 25.09.2004 முட்கொம்பன் அ.த.க பாடசாலையிலும், 26.09.2004 சாமிபுலம் தியாகதீபம் மருத்துவ மனையிலும் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது. இந் நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கமக்காரர் அமைப்பு உறுப்பினர்கள், எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (34)

## கிளி.ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க கொடிவாரம் இன்று ஆரம்பம்


(அலவலக செய்தியாளர்)


கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரால் நடாத்தப்பெறும் ஊனமுற்றோருக்கான கொடிவாரம் இன்று ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் அனுஷ்டிக்கப்பெறவுள்ள கொடிவார நிகழ்விற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கி மாற்றீடான வலுவுள்ளோரின் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உதவிடும் வண்ணம் கிளி.மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்க இயக்குனர் அருட்சகோதரி லூட்ஸ்யோசெப் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ,கு)

# கண்டாவளை மகாவித்தியாலயத்தில் புதிய கணினிப்பிரிவு நேற்று ஆரம்பம்

கண்டாவளை மகாவித்தியாலயத்தில் நேற்று கணினிப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம் அவர்கள் நாடாவை வெட்டி கணினிப்பிரிவு மண்டபத்தைத் திறந்து வைத்தார். 45 மாவீரர்களின் பெயர்ப் பலகையினை ஜீவராஜ் அவர்களும், பத்மாகரன் அவர்களும் திரை நீக்கம் செய்து வைத்தனர். கணினிப் பிரிவு மண்டபத்தினை கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர் அரியரத்தினம் அவர்






புரையினை வித்தியாலய ஆசிரியர் மகேஸ்வரநாதன் நிகழ்த்த, பாடசாலை மாணவி இந்துளாவின் வரவேற்பு நடனத்தினையடுத்து விருந்தினர் உரைகளை கண்டாவளைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ராகுலசிங்கம், கிளிநொச்சி

முன்னதாக காலை 9 மணிக்கு ஆரம்பமான இத்திறப்பு விழா நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றிவைக்க, பாடசாலைக் கொடியினை வித்தியாலய பிரதியதிபர் இராஜேஸ்வரி ஏற்றி வைத்தார். தொடர்ந்து வித்தியாலயத்தில் கல்விகற்றுப் போராட்டத்தில் இணைந்து வீரச்சாவடைந்தகள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து வித்தியாலய அதிபர் சி.சிறீதரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வுகளில் பொதுச் சுடரினை கிராமஅலுவலர் பரமதாஸ் அவர்களும், தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ராஜன் அவர்களும், சிறீகனநாதன் அவர்களும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து வரவேற்

வலயக்கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், மாணவரமைப்பைச் சேர்ந்த இளம்பிரியன், ஜீ.டி.செட் நிறுவன பிரதிநிதி சத்தியமூர்த்தி ஆகியோர் நிகழ்த்த, சிறப்புரையினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் நிகழ்த்தினார்.

இக்கணினிப் பிரிவுக்குரிய கணினிகளை பாடசாலையில் கல்வி கற்று தற்போது வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்களும் மற்றும் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரும், நலன் விரும்பிகளும் இணைந்து அன்பளிப்புச் செய்திருந்தனர்.

இவ் அன்பளிப்பிற்காக பாடசாலை சமூகத்தினர் பாராட்டு மடல்களையும் அந்தந்த அன்பளிப்பை வழங்கியவர்களின் உறவினர்களிடம் வழங்கினர். இந்நிகழ்வில் மாகாணசுகாதார பிரதிப்பணிப்பாளரும், கிளிநொச்சி வைத்தியசாலை வைத்தியரும் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ச)

## உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு கட்டுரை, சிறுகதைப் போட்டிகள்

எதிர்வரும் 6.10.2004 உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையில் தமிழ்த்துறைப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இப்போட்டிக்கு எழுதப்படும் கவிதைகள் 300 சொற்களுக்கு குறையாமலும், சிறுகதைகள் 500 சொற்களுக்கு குறையாமலும் கட்டுரை 500 சொற்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும். போட்டிகள் நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தமிழ் உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (34)

## முல்லை காவல் பணிமனையினரால் குற்றத்தடுப்பு கருத்தூட்டல்

முல்லைத்தீவு காவல் பணிமனையினரால் கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் வீடு வீடாகச் சென்று மக்களுக்கு சமகால நிலவரம் தொடர்பாகவும், குற்றத் தடுப்பு தொடர்பாகவும் கருத்தூட்டல் செய்து வருகின்றனர்.

இக் காலகட்டத்தில் மக்கள் எவ்வாறு செயற்படவேண்டும் அதற்கு காவல்துறையின் பங்கு என்பன போன்ற பல விடயங்கள் அறிவுபூர்வமான கருத்துரைகளை காவல்மணிமனையினர் மேற்கொண்டு வருகின்றனர். (20)

## இலங்கை பிரஜைகளாக பதிவு செய்ய நடமாடும் சேவை

யு.என்.எச்.சி.ஆர் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியோரின் அனுசரணையுடன் நேற்று மன்னார் பிரதேச செயலர் கேட்போர் கூடத்தில் இது வரையும் தம்மை இலங்கை பிரஜைகளாக பதிவு செய்யாதவர்கள் நலன் கருதி ஓர் நடமாடும் சேவை இடம் பெற்றன. இதில் மன்னார் பிரதேச செயலாளர், யு.என்.எச்.சி.ஆர். வெளிக்கள அலுவலர் உட்பட பலர் கலந்துகொண்ட இச் சேவையை நடாத்தினர். சமாதான நீதவானின் முன்னிலையில் ஓர் படிவம் நிரப்பி மிகவும் இலகுவான முறையில் இச்சேவை இடம் பெற்றது. இதேபோன்று மடுப்பிரதேசத்திலும் இப்பதிவுகள் இடம் பெற்றன. (மி)

## சிறுவர் தினத்தை முன்னிட்டு கவிதை, கட்டுரைப் போட்டிகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு (சர்வதேச சிறுவர் தினம் ஒக்டோபர் 01) பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கவிதை, கட்டுரைப்போட்டிகள் நடாத்தப் பெறவுள்ளது.

"பிள்ளைகளுக்கான சினேகபூர்வ சமூகத்தினை கட்டியெழுப்புவோம்'' என்பதனைக் கருப்பொருளாகக் கொண்டு சிறுவர் உரிமைகள் அவற்றினைப் பாதுகாத்தல் என்பவற்றினை பிரதிபலிக்கும் வகையில் கட்டுரை, கவிதைகள் தயாரிக்கப்படல் வேண்டுமென தெரிவிக்கப் பெற்றுள்ளது.

கட்டுரை, கவிதைகளை மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபரிடம் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்க வேண்டுமெனவும், பிரதியினை தங்கள் பகுதி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கும் வண்ணம் முல்லைத்தீவு சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ,கு)


## கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்வரும் மாதங்களிற்கு உலருணவு விநியோகம் மேற்கொள்ளத் தேவையான நாட்டுப் புழுங்கல் அரிசி, கோதுமைமாவு என்பவற்றை வழங்கக் கூடிய பதிவு செய்யப்பெற்ற ப.நோ.கூ.சங்கங்களில் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| மாதம் | நாட்டுப்புழுங்கல் அரிசி | கோதுமைமாவு |
|---|---|---|
| 2004 ஒக்டோபர் | 450 மெ.தொன் | 250 மெ.தொன் |
| 2004 நவம்பர் | 450 மெ.தொன் | 250 மெ.தொன் |
| 2004 டிசம்பர் | 450 மெ.தொன் | 250 மெ.தொன் |

இதற்கான கேள்விப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் இச் செயலகத்தில் 2004.09.27 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி

(சி. 10222)



### பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின்

## சிறுவர் உரிமைகள் தொடர்பான இரு நாட்கள் பயிற்சிப்பட்டறை

வள்ளிபுனம் பாரதி சிறுவர் இல்லத்திலுள்ள சிறுவர்களில் 30 பேருக்கு பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினரால் சிறுவர் உரிமைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை கடந்த சனி, ஞாயிறு தினங்களில் பாரதி சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது.பெண்கள் அபிவிருத்திப்புனர்வாழ்வு நிறுவன மாவட்ட இணைப்பாளர் செல்வி ஆர்.நிறஞ்சனா தலைமையில் ஆரம்பமான பயிற்சிநெறியில் பயிற்சிகளை முல்லைக்கல்வி வலய தொலைக்கல்வி ஆசிரியர் சி.சுந்தரலிங்கம், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி செ.சந்திரா ஆகியோர் அளிததனர்.யூனிசெவ்வின் நிதியுதவியுடன் நடைபெற்ற இப்பயிற்சி நெறியினை சிறுவர் உரிமை பயிற்சி திட்ட இணைப்பாளர் செல்விப.பாமினி ஒழுங்குபடுத்தியிருந்தார்.இப்பயிற்சியின் மூலம் சிறுவர்களுக்கு என்னென்ன உரிமைகள் உள்ளதென சிறுவர்களுக்கு செயல்முறை மூலம் தெளிவுபடுத்தியமையை அவதானிக்க முடிந்தது.(20)

## கிளிநொச்சி நகர்ப் பகுதியில் கட்டாக்காலி நாயழிப்பு

கரைச்சிப் பிரதேச சபையின் கிளிநொச்சி நகர்ப்பகுதியில் 16.09.2004 ஆம் திகதி கட்டாக் காலி நாய்களை அழிப்பதற்கான வேலைத்திட்டம் பிரதேச சபையாலும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அவர்களினாலும் மேற்கொள்ளப்படவுள்ளதால் அன்றைய தினம் வளர்ப்பு நாய் சொந்தக்காரர்கள் அனைவரும் தங்கள் வளர்ப்பு நாய்களைக் கட்டி, கட்டாக காலி நாயழிப்பு வேலைத் திட்டத்திற்கு தமக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் கேட்டுள்ளார்.



பலூஜாவில் தனது தாக்குதலில் பலியான அமெரிக்கப்படை வீரருக்கு சொந்தமான ரிமோட் கன்ரோலின் ஒருபகுதியைக் காட்டும் முஹாஹிதின் போராளி ஒருவர்.

# ஆப்கானில் பதவி நீக்கப்பட்ட ஆளுநரின் ஆதரவாளர் அமெ.படையினருடன் மோதல்

## ஏழுபேர் பலி; இருபது பேருக்குக் காயம்

(காபூல்)

**ஆப்கானிஸ்தான் ஹெராத் மாகாண ஆளுநர் பதவி நீக்கப்பட்டதையடுத்து அவரது ஆதரவாளர்களுக்கும், பொலிஸ் மற்றும் அமெரிக்கப் படையினருக்குமிடையே இடம் பெற்ற மோதலில் 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.**

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த மோதலில் மேலும் 20 பேர் படுகாயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து ஹெராத் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆளுநர் "இஸ்மாயில்கான்" பதவி பறிக்கப்பட்டதையடுத்து அவரது நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு அலுவலகங்கள் எரிக்கப்பட்டதோடு, சூறையாடப்பட்டுள்ளது. இதேவேளை பாகிஸ்தான் இராஜதந்திர அலுவலகமும் தீயிடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து ஆப்கானிஸ்தானின் இராணுவ கட்டளைத் தளபதி ஹெறாத் மாகாணத்தில் இரவு நேர ஊடரங்குசட்டத்தைப் பிறப்பித்துள்ளார்.

# எதிர்க்கட்சியினர் மறைத்து வைத்திருந்த ஆயுதங்கள் சூடானிய படையினரால் மீட்பு!

சூடானில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதக் குவியல் ஒன்றைக் கண்டுபிடித்ததாக அந்நாட்டுப் பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.

அரசிற்கெதிராக ஆயுதப் புரட்சி நடத்த எதிர்க்கட்சியினர் இந்த ஆயுதங்களை பதுக்கி வைத்திருந்தனரென்று பாதுகாப்புப்படை கூறியுள்ளது. தலைநகர் கார்டொமிற்கு வடக்கேயுள்ள அச்சுமீலே என்ற இடத்தில் சோதனை நடத்தியபோது ஆயுதங்கள் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதென்றும், இதன்போது 100 இயந்திரத் துப்பாக்கிகள், 10 குண்டுகள் உட்பட பல ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதென்றும் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் மக்கள் காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த 37பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்புப்படை கூறியுள்ளது.

இதேவேளை ஆயுதக் குவியல் கண்டுபிடிக்கப்பட்டது குறித்து மக்கள் காங்கிரஸ் கட்சி கருத்து எதுவும் தெரிவிக்கவில்லையென்றும் கூறப்படுகின்றது.



பாக்தாத் விமான நிலையத்துக்குச் செல்லும் பாதையில் தீவிரவாதிகளின் தாக்குதலுக்குள்ளாகி எரியும் வாகனத்தினருகே காவலிருக்கும் அமெரிக்கப் படைவீரர்.


# சவுதியின் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிற்போடப்பட்டது

(றியாத்)

சவுதியரேபியாவின் முதல் கட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சவுதி உள்ளூராட்சி மற்றும் கிராம விவகாரத்திற்கென அமைச்சரவை வெளியிட்ட அட்டவணையிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

முதல் கட்ட உள்ளூராட்சித் தோதல் எதிர்வரும் நவம்பர் மாதமும், ஏனைய மூன்று கட்ட தேர்தல்கள் அடுத்த வருடத்தின் தொடக்கத்திலும் நடைபெறுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது வெளியிடப்பட்ட அட்டவணையில் றியாத் மாகாணத்தில் வாக்காளர்களைப் பதிவு செய்யும் பணி நவம்பர் மாதம் நடைபெறும் என்றும் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மற்றும் தென் மேற்கு பகுதிகளில் 2 கட்டமாக மார்ச் 3 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் எனவும் மக்கா மற்றும் மதீனா பகுதிகளிலும் வடக்குப் பகுதிகளிலும் ஏப்ரல் 21 ஆம் திகதி வரை தேர்தல் நடைபெறாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பங்களாதேஷ் டாக்காவில் ஏற்பட்ட திடீர் மழை வெள்ளத்தால் நீர்நிரம்பிய பாதையூடாக ரிக்ஷாவை ஓட்டிச்செல்லும் பங்களாதேஷ் வாசிகள்.

# காஸாவிலிருந்து யூதரை வெளியேற்றும் திட்டத்திற்கெதிராக ஆர்ப்பாட்டம்

(ஜெருசலேம்)

காஸா மேட்டு நிலப்பகுதியில் இருந்து மேற்குக் கரைப் பள்ளத்தாக்கின் சில பகுதியில் இருந்தும் யூதக் குடியிருப்பாளர்களை வெளியேற்றும் திட்டத்திற்கெதிராக ஜெருசலேமில் ஆயிரக்கணக்கான யூதக் குடியிருப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் காஸா மற்றும் மேற்குக் கரையின் சில பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய குடியிருப்பாளர்களை வெளியேற்றும் தனது திட்டத்தை தனது கட்சியின் நிராகரிப்புக்கு மத்தியிலும் அடுத்த ஆண்டு முதல் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளார். இந்த வகையில் அரசியல் பதற்றம் அதிகரித்துள்ள நிலையிலேயே ஜெருசலேமில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. வலதுசாரி எதிர்த்தரப்பினர் உள்நாட்டு யுத்தமொன்றை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டதாக குற்றம் சாட்டியும் உள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அநேகமானோர் இஸ்ரேலிய அடிப்படைவாத யூதர்களென்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் பெருந்திரலான இளம் பருவத்தினரும் பங்குபற்றினர்.காஸா மேட்டு நிலப் பகுதியில் 13 இலட்சம் பலஸ்தீனர்களோடு 21 குடியிருப்புப் பகுதிகளில் சுமார் எண்ணாயிரம் யூதர்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா.பொதுச் சபை 21 ஆம் திகதி கூடும்

ஐ.நா சபையின் பொதுக் குழு எதிர்வரும் 21 ஆம் திகதி தொடங்கி இரண்டு வார காலம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடக்க நாள் அன்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ் உரையாற்றுவார் எனவும், இந்தக் கூட்டத்தில் 176 நாடுகளைச் சேர்ந்த சனாதிபதிகள், பிரதமர்கள் மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஈராக்கின் இடைக்கால அரசின் பிரதமர் இயத் அலாவியும் இக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாகவும் இதற்காக இயத் அலாவி எதிர்வரும் 19 ஆம் திகதி அமெரிக்கா செல்லவுள்ளதாகவும் இவருடன் ஈராக்கின் வெளியுறவு அமைச்சரும் இக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



பலூஜாவில் அமெரிக்க வான், தரைப்படைகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட நகர சுத்திகரிப்புத் தொழிலாளியின் உடலைச் சூழ்ந்து நிற்கும் ஈராக்கியர்கள். (சம்பவத்தில் 15பேர் பாலியாகினர்.)

# வடகொரியா அணுகுண்டு சோதனையா? தீவிரமாக ஆராய்கிறது அமெரிக்கா

வடகொரியாவில் சீன எல்லை அருகே குண்டு வெடித்தது போன்ற பயங்கரமான சத்தம் கேட்டது. 4கி.மீ.பரப்புக்கு தூசு கிளம்பியது. அணுகுண்டு வெடிக்கவைத்து சோதனை நடத்தப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

வடகொரியா உருவான 56ஆம் ஆண்டு விழா கடந்த வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் ரியான் காங் மாநிலம் கிம் யுங்கிக் மாவட்டத்தில் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. இந்த இடம் சீன எல்லைக்கு அருகே உள்ளது. வெடிச் சத்தம் கேட்டபோது தூசுப் படலம் 4 கி.மீ.பரப்புக்கு எழுந்தது. சாட்டிலைட் மூலம் இந்த வெடிப்பு சம்பவத்தைப் பார்த்த அமெரிக்கா இதுபற்றி விவரம் அறிய அதிக ஆர்வம் காட்டி வருகிறது.

எதனால் வெடிச்சத்தம் கேட்டது என்பது தெரியவில்லை. அணுகுண்டு சோதனையாக இது இருக்கலாம் என்பதை மறுக்க முடியாது என்று அமெரிக்கா கூறி உள்ளது.

கம்யூனிஸ்ட்டு நாடான வடகொரியாவில் எல்லாமே திரை மறைவில் தான் நடக்கும் என்பதால் எதுவும் வெளியுலகத்திற்குத் தெரியப்படுத்தப்படாது.

அணுக்குண்டுச் சோதனை காரணமாக இந்தச் சத்தம் ஏற்பட்டு இருக்காது என்று தென் கொரிய அதிகாரிகள் சிலர் கூறுகின்றார்கள். இச்சந்தேகங்களுக்குப் பதிலளித்துள்ள வடகொரிய அதிகாரிகள் குண்டுவெடிப்பு இடம் பெற்ற வடக்குப்பகுதியை இராஜதந்திரிகளோ நிபுணர்களோ வந்து பார்வையிடலாம் என்றும் தாம் அணுகுண்டுச் சோதனை நடத்தவில்லையென்றும் கூறியுள்ளார்.


பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# பிரஜா உரிமை அற்றவர்களைப் பதிவு செய்ய வவுனியாவில் நடமாடும் சேவைக்கு ஏற்பாடு

**வவுனியா மாவட்டத்தில் வசிக்கும் இலங்கைப் பிரஜா உரிமையற்ற வர்களை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்ய வவுனியா மாவட்ட அரச அதிபர் அலுவலகமும், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகமும் இணைந்து நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றன.**

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரு மான க.கணேஷ் ஐக்கியநாடுகள் உயர் தானிகராலயத்தின் வவுனியா மாவட்ட வெளிக்கள அலுவலக தலைமைஅதிகாரி ஜிம்வொறொல் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித் துள்ளதாவது:

வவுனியா மாவட்டத்தில் வசிக்கும் இலங்கைப் பிரஜா உரி மையற்ற நபர் அல்லது அவர்களது பெற்றோர்கள் அண்மைய இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் களாகவும் 30.10.1964 இல் இருந்து இலங்கையில் நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருப்பதோடு 1964 ஆம் ஆண்டு கைச்சாத்திட்ட சிறீமா- சாஸ்திரி உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்ட இந்திய கடவுச் சீட்டினை வைத்திருந்த போதும் தொடர்ந்தும் இலங்கையில் வசிக்க விரும்புபவர்களும் இப் பதிவினை மேற்கொண்டு பயனடையலாம் எனவும் மேலதிக விபரங்களை அந் தந்தப் பகுதி கிராம சேவகர்களிடம் பெற்றுக்கொள்வதுடன் கீழ்க் குறிப் பிடப்படும் நடமா ம் சேவை நிலை யங்களில் பதிவுகளை மேற்கொள் ளலாம். 14.09.2004 இன்று காலை 9 மணியில் இருந்து 4மணி வரை செட்டிகுளம் பிரதேச செயலகம், சாம்பல் தோட்டம், சன சமூக நிலையம், பூந்தோட்ட முகாம் பிரிவு- 5,6 சிதம்பரபுரம் முகாம் பிரிவு- Bஇலும் பதிவுகளை மேற்கொள் வதுடன் 15.09.2004 அடப்பன் குளம்முகாம், சமணம் குளம் கிராமசேவகர் அலுவலகம், பூந் தோட்டம் முகாம் பிரிவு 7,8 சிதம் பரபுரம் முகாம் பிரிவு- C இலும் 16.09.2004 ஆம் திகதி வீரபுரம் சனசமூக நிலையம், தரணிகுளம் கிராம சேவகர்அலுவலகம், பூந் தோட்டம் முகாம் பிரிவு -9, சிதம்பர முகாம் பிரிவு D இலும் 17.09.2004 ஆம் திகதி கண்ணாட்டி சனசமூக நிலையம், சமயபுரம் கிராம அபி விருத்தி சங்கம், பூந்தோட்டம் முகாம் பிரிவுகள் முறையே 1,2,3,4,5,6,7,8,9, சிதம்பர முகாம் பிரிவு A, B,C,D ஆகியவற்றிலும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இந்த நடமாடும் சேவை நேற்று ஆரம்பமானதுகுறிப்பித்தக்கது.(15)



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் உள்ள சத்திரசிகிச்சை கூடத்தினை ஜெனரல் என்ஜினியரிங் சேவிஸ் நிறுவனத்தினர் இலவசமாக புனரமைத்துக் கொடுத்திருப்பதனைப் படத்தில் காணலாம். (சோ,கு)

# மருதோடை தபாலகத்தை இயங்க வைக்க வேண்டுகை

நெடுங்கேணி-மருதோடைப் பகுதி தபாலகம் இயங்காமையினால் அப்பகுதிமக்கள் கடிதத் தொடர்புகளுக்கு பெரும் சிரமப்பட்டு வருகின் றனர்.மேற்படி பகுதி தபாலகம் சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப் பினால் 1984ஆம் ஆண்டு செயலிழந்து போன போதும் தற்போது ஏற் பட்டுள்ள சமாதான நிலையிலாவது அப்பகுதி மக்கள் மீளக் குடியேறிய போதும் தபாலகம் மீள் இயக்கம் செய்யப்படாத நிலையினால் அப்பகுதி மக்கள் உட்பட அரச, அரசசார்பற்ற நிறுவனத்தினர் மற்றும் முக்கியமாக மாணவர்கள் பல சிரமங்களையும் இடையூறுகளையும் தொடர்ச்சியாக எதிர்நோக்கி வருகின்றனர். (ஆ)

# பேருந்து சேவையை ஆரம்பிக்க மக்கள் வலியுறுத்து

கண்டாவளைக்கான பேருந்து சேவையை ஆரம்பிக்க அப்பகுதி மக்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.இப்பகுதிக்கான பேருந்து சேவை வீதிச் சீர்கேட்டை காரணம் காட்டி கடந்த ஒருவருடமாக இடை நிறுத்தப்பட்டது. தற்போது கண்டாவளை பிரதானவீதி புனரமைப்புச் செய்யப்பட்டு சுமார் 4கிலோ மீற்றர் தூரம் வேலைகள் முடிவ டைந்துள்ளன. இதனையடுத்து பேருந்து சேவையை நடத்துமாறு மக்கள் கோரியுள்ளனர். கடந்த ஒருவருடமாக இப்பகுதி பாடசாலை மாணவர்கள் அரச/அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள், மக்கள், நோயாளர்கள் எனப்பல வகைப்பட்டவர்கள் பேருந்து சேவை இல்லாததால் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். மீண்டும் பேருந்து சேவையை ஆரம்பித்து மக்களின் துன்பங்களை நீக்குமாறு சம்பந்தப்பட்டோரை மக்கள் உருக்கமாக வேண்டுகின்றனர். (14)

# சிறிலங்கா அரசின் யுத்தநடவடிக்கைகளால் 3300 பெண்கள் குடும்பத்தலைவரை இழப்பு!

## –உதவிக்கோரிக்கைகளும் அரசினால் புறக்கணிப்பு

(முள்ளியவளை)

சிறிலங்கா அரசின் யுத்தநடவடிக் கைகளால் முல்லைத்தீவு மாவட் டத்தில் மட்டும் 3300 பெண்கள் குடும் பத்தலைவர்களை இழந்த நிலையில் உள்ளனர். இப் பெண்களுக்கு இது வரை அரசாங்கம் எவ்வித உதவி களையும் செய்யவில்லை. இதனால் அவர்களது நாளாந்த வாழ்கைக் கஷ்டங்களையும், எதிர்காலததையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு உதவு மாறு முல்லை மாவட்டஅரச அதிபர் இமெல்டா சுகுமார் சிறி லங்கா அரசிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் இதுவரை எவ்வித உத விகளும் கிடைக்கவில்லையென அரசஅதிபர் தெரிவித்துள்ளார். (ஆ)

# அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஊரகவளர்ச்சித்துறை ஏற்பாடு

(மன்னார்)

மன்னார் பெரியமடு சன்னார் எனும் இடத்தில் ஊரகவளர்ச்சித் திட்டததின் கீழ் வீடுகளைஅமைத்துக் கொடுத்து .கடந்தயுத்த காலத்தில் வீடு களைஇழந்தவர்களுக்கும், ஏனைய பாதிப்புக்களை அடைந்த மக்களுக் குமாக இப் பகுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை தமிழீழ ஊரகவளர்ச்சித் துறையினர் மேற் கொண்டுள்ளனர்.தொண்டு நிறு வனங்களின் உதவியுடன், பொது வசதிகளான முன்பள்ளி, வைத்திய சாலை,நீர்விநியோகம், மின்சார வசதிகள் போன்றஅடிப்படைவசதி களை ஊரகவளர்ச்சித் துறையினர் செய்யவும்முன்வந்துள்ளனர். (மி)

# கிராம அலுவலர் கடமையில் மாற்றமில்லை சுற்றுநிருபம் விரைவில் வெளியிடப்படும்

## அமைச்சர் உறுதிமொழி

(மன்னார்)

கிராம அலுவலர்கள் தமது அலுவலகத்தில் புதன்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் பி.பகல் 12.30 மணி வரை கட்டாயம் இருக்கவேண்டு மென்று கோரப்பட்ட தீர்மானத் தினை அகில இலங்கை ஐக்கிய கிராம அலுவலர்சங்கம்ஆட்சே பித்துள்ளது.கொழும்பில் கடந்த மாதம் அமைச்சர் அமரசிறி தொடங் கொடவை சந்தித்து தமது ஆட் சேபத்தைத் தெரிவித்து பேச்சு வார்த்தை நடத்தியதையடுத்து முன் னைய நடைமுறை போன்று திங்கள் முழுநாளும், வியாழன், சனி ஆகியநாட்களில் அரை நாளும் அலுவலகநாட்களாக மாற்றப்பட்டுள்ளது. இதற்கான சுற்று நிருபம் வெகுவிரைவில் அனுப்பி வைக்க படுமென்று அமைச்சர் வாக்குறுதியளித துள்ளார். இதேவேளை இலங் கையில் தற்சமயம் 500 இற்கு மேற்பட்ட கிராமஅலுவலர்வெற் றிடங்கள்உண்டு.இதனைத்தான் உடனடி யாகநிரப்புவதற்கு ஆவன செய்வதாகவும் இனிமேல் 300 குடும்பங்களுக்கு ஒருகிராம அலுவலர் என்ற ரீதியில் பிரிக்கப் படுமென்றும் அப்பேச்சுவார்த் தையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (மி)



மு/ மல்லாவி மத்திய கல்லூரியின் ஓலையினால் வேயப்பட்ட பாடசாலை கொட்டகை குப்பை கூழங்களுக்கு தீயிடப்பட்ட போது எரிந்து நாசமானது. மேற்படி சம்பவம் பாடசாலை 2ஆம் தவணைப் பரீட்சை முடிந்து பாடசாலை தொடங்கிய நாளான 01.09.2004 அன்று பி.ப 1.30 மணியளவில் இடம் பெற்றது.குப்பை கூழங்களுக்கு தீயிடப்பட்ட போது தீ அருகில் இருந்த பனையில் பரவியதால் தீப்பொறி ஓலைக் கொட்டிலில் பறந்து கொட்டகை முற்றாக எரிந்து நாசமானது. இக் கொட்டகை கடந்த மாதம் யூனிசெப் நிதியுதவியுடன் புதிதாக வேயப்பட்டது. தளபாடங்கள் சிறிதளவு எரிந்து போயின மிகுதி தளபாடங்கள் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் மீட்கப்பட்டன. (படம்.அன்ரனி)

# சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் சமூக நலப் பயிற்சி நெறி தொடர்கிறது

(அலுவலகசெய்தியாளர்)

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சுகாதாரத் திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி.நிறுவனத்தின் நிதி உதவியுடன் நடாத்தப்படும் 2ஆம் கட்ட சமூக நலப்பயிற்சிநெறி பாடசாலை மட்டத்தில் மாணவர் களுக்கு நடாத்தும் அடிப்படையில் கடந்த 4ஆம் 5ஆம் திகதிகளில் கிளிநொச்சி பரந்தன் வலயத்தில் கிளி/முருகானந்த மகாவித்தி யாலயம், பரந்தன்இந்துமகா வித்தியாலயம் ஆகியவற்றில் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் ஒவ் வொரு பாடசாலைகளிலும் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர் களும் கலந்துகொண்டனர். மேலும் இப்பயிற்சி நெறியில் முதலுதவி, உடல் அமைப்பும் தொழிற்பாடும், முதலுதவிச் செய்முறைகள், தொற்று நோய்கள், சுகாதார நடை முறைகள் தொடர்பாக பல விரிவு ரைகள் சென்ஜோன்ஸ் அம்பு லன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர், திட்ட இணைப்பாளர், தலைவர், தொண் டர்கள் ஆகியோராலும் சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டன. இப்பயிற்சி நெறியில் முதலுதவி தொடர்பான கைந்நூல் சென் ஜோன்ஸ் அம்பு லன்ஸ் படைப்பிரிவினரால் தயாரிக் கப்பட்டு பயிற் சியில் பங்குபற்றிய ஒவ்வொரு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் வழங்கப் பட்டது.மேலும் பயிற் சியை நிறைவு செய்த ஒவ்வொரு பாடசாலை களுக்கும் முதலுதவிப் பெட்டி களும்அதற்கான மருந் துகள், உபகரணங்களும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரால் இத்திட்டத்தில் வழங் கப்பட்டதோடு, ஒவ்வொரு பாடசா லையிலும் பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களிடை யே பாடசாலை மட்டத்தில் முதலுத விக் குழுக்கள் அமைக்கப்பட்ட தோடு பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ், சின்னங்கள் வழங்கும் ஒழுங்கும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரி வினரால் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

## பயண உதவி

(மன்னார்)

இந்தியாவிலிருந்து தலை மன்னார் ஊடாக தாயகம் திரும்பி, மன்னார்மாவட்டம் தவிர்ந்த பிற மாவட்டங்களுக்குச் செல்லும் அகதிகளின் நலன்கருதி மன்னார் பள்ளிமுனை வீதி யிலுள்ள I.O.M என்ற நிறுவனம் ஒவ்வொருவருக்கும் தலா 300 ரூபாவைப் பயணக்கொடுப் பனவாக வழங்கி, அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு உதவிவருகிறது. (மி)


# முன்பள்ளி சிறார்களின் ஆக்கப்பொருட் கண்காட்சி

துணுக்காய் கல்விவலயத்திற்குட்பட்ட துணுக்காய் பிரதேச முன் பள்ளிசிறார்களின் ஆக்கப் பொருட்கண்காட்சி கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் பிரதேசமுன்பள்ளி கல்வி மேம்பாட்டுக்குழு தலைவர் சு.ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் மங்கலவிளக்கினை முன்பள் ளிகளின் உதவிக்கல்விபணிப்பாளர் செல்வி கு.கிருபரஞ்சினி, யோகபுர பாடசாலை அதிபர்திருமதி க.கிருஸ்ணபிள்ளை, ஆரம்பக் கல்வி, ஆசிரிய ஆலோசகர் திருமதி கிருஸ்ணராஜன் ஆகியோர் ஏற்றிவைக்க, தேசியக் கொடியை மல்லாவிபிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் ஏற்றி வைத்தார்.அகவணக்கத்தைத் தொடர்ந்து நிறுவனக்கொடிகள் ஏற்றப் பட்டன.கண்காட்சி மண்டபத்திறப்பையடுத்து பெருமளவானோர் கண் காட்சியைப் பார்வையிட்டுபயன்பெற்றனர். (24)

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பால் அமெரிக்கா தீவிர கவனம் செலுத்துகிறது

–யாழ். பல்கலை அரசியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கணேசலிங்கம்

**வெளிநாடுகளைப் பொறுத்தவரை தற்போது எமதுபோராட்டத்தை நோக்கி அனைத்து நாடுகளின் கவனமும் செலுத்தப்படுகின்றது. குறிப்பாக அமெரிக்கா இதில் உன்னிப்பாகவுள்ளது. இப்போராட்டம் வெல்லப்போவதை அமெரிக்கா விரும்பவில்லை. இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக அரசியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கணேசலிங்கம் தெரிவித்தார்.**



யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் நாடகமும், அரசியல் துறை மாணவ அரங்கக்குழுவினர் நடத்திய கருத்தாடல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை 3.00மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகக் கேட போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் நாடகமும், அரசியல்துறை மாணவர்கள், விரிவுரையாளர்கள், பத்திரிகையாளர்கள்,யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் சொலமன் சிறில் யாழ். மாவட்ட பொதுஅமைப் புக்களின் ஒன் றியச் செயலா ளர் கனகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் உண்மை நிலையைப் புரிய வைக்க வேண்டும். அத்தோடு சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடுகள் தொடர் பாக மக்களைத் தெளிவுபடுத்த வேண்டும். இதற்காகப் பல்வேறுபட்டவர்களின் ஆலோசனைகளைப் பெறவே இக்கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டது.

உலகில் கிட்டத்தட்ட 250இற்கு மேற்பட்ட நாடுகளின் விடுதலைப் போராட்டங்கள் இடம்பெற்றன. அதன்போதும் இதேகொள்கையையே வெளிநாடுகள் கடைப்பிடித்தன. வெளிநாடுகளைப் பொறுத்தவரை அவை எமது போராட்டத்தை நசுக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாகவுள்ளன. வெளிநாட்டு அமைப்பை திருப்திப்படுத்த முற்பட்டால் எமது போராட்டம் வலுக்குன்றிவிடும் போராட்டத்தை இழுத்தடித்தால் தமிழ் மக்களின் பலம் குன்றிவிடும் என நினைக்கிறது. மாறாக இன்னமும் பலம் ஏற்படும் என்பதை உலகிற்கு நாம் காட்ட வேண்டும் எனக் குறிப்பிட்டார். இதில் அனை வரது கருத்துக்களும் பரிமாறப்பட்டன. (36)

## அகில இலங்கை சைவப்புலவர் சங்க தேர்வின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளது

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் 2004 ஏப்ரல் மாதம் நடாத்திய இளஞ்சைவப்புலவர் சைவப்புலவர் தேர்வின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன. இளஞ்சைவப்புலவர் திரு.துரைசிங்கம் குமரநாதன் கொடிகாமம் 2ஆம் பிரிவு, செல்வி. சுகாசினி கிருஷ்ணபிள்ளை சாவகச்சேரி 2ஆம்பிரிவு, திரு. கந்தையா சுகதீஸ் சண்டிலிப்பாய் 3ஆம் பிரிவு, திரு.வைத்தியலிங்கம் இரகுநாதமுதலியார் யாழ்ப்பாணம 2ஆம்பிரிவு, செல்வி.குமுதினி சரவணமுத்து வரணி 3ஆம் பிரிவு, திரு.தவராசா குமரன் சுன்னாகம் 2 ஆம் பிரிவு, செல்வி. புஸ்பலதா இராமலிங்கம் கிளிநொச்சி 2ஆம்பிரிவு, செல்வி. சந்திரிகா இராமநாதன் வவுனியா 2ஆம் பிரிவு, செல்வி வசந்தி நமசிவாயம் வவுனியா 2ஆம் பிரிவு, திரு.வீரபாகு ஐங்கரன் வவுனியா 2ஆம் பிரிவு, செல்வி.இராசேந்திரமலர் இராசையா வவுனியா 3ஆம் பிரிவு, செல்வி.பவானி மகேஸ்வரன் வவுனியா 2ஆம் பிரிவு, செல்வி.பவளமலர் ஜேசுதாசன் வவுனியா 2ஆம் பிரிவு, செல்வி.ஆனந்தரூபி ஆனந்தராசா மன்னார் 2ஆம் பிரிவு, திரு.எதிர்மன்னசிங்கம் ஜெயரஞ்சித் புதுக்குடியிருப்பு 2ஆம் பிரிவு,

சைவப்புலவர்

திரு.சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் இணுவில் 2ஆம் பிரிவு, செல்வி.சசிலேகா கனகசுந்தரம்பிள்ளை அச்சுவேலி 2ஆம் பிரிவு, திரு.குஞ்சிதபாதம் சுரேஸ்குமார் யாழ்ப்பாணம் 3ஆம் பிரிவு, திரு.குமாரசுவாமி சுமுகலிங்கம் சாவகச்சேரி 2ஆம் பிரிவு, திரு. துரைராசாசிங்கம் சடாட்சரசிங்கம் கிளிநொச்சி 3ஆம் பிரிவு.

## மின்சார சபையின் அலட்சியப் போக்கிற்கு மனித உரிமைகள்ஆணைக்குழுவிடம் புகார்

நுணாவில் பகுதியைச் சேர்ந்த ஜெயபால சுந்தரம் என்பவர் இலங்கை மினசார சபையின் அலட்சியப் போக்கினால் தன்னுடைய அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறி யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

தன்னுடைய வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்க கடந்த பல மாதங்களாக இழுத்தடிப்புச் செய்யப்படுவதாலும்,தனக்கு பின்பு பதிவு செய்த அனைவருக்கும் இப்பகுதியில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டும், தனது வீட்டுக்கு மினசாரம் பெறுவதற்கு அனைத்து ஆவணங்கள் சரியாக இருந்தும் அதிகாரிகளின் அலட்சியப் போக்கினால் மந்தகதியாக இயங்கும் மினசாரசபையைக் கண்டித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

## நல்லூர்க் குமரனது 12அவது மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் குமரனது பன்னிரண்டாவது மலர் வெளியீடு நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் மாநகரசபை ஆணையாளரும் சைவ சமய விவகாார குழுத்தலைவருமான கலாநிதி க.குணராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் முதல்நிகழ்வாக மங்கல விளக்கினை கலாநிதி குணராசா ஏற்றிவைத்தார். தொடர்ந்து வயலின் வித்துவான் ஜேராமனது வயலின் கச்சேரி நிகழ்வும், தொடர்ந்து வரவேற்புரை குழு செயலாளர் ரத்தினசிங்கம் நிகழ்த்தினார். தலைமையுரையினைத் தொடர்ந்து ஆசியுரையை நல்லூர் ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமச்சாாரிய சுவாமிகள், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி மகேஸ்வரக் குருக்கள் நிகழ்த்தினர்.

வெளியீட்டு உரையை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்தினார். நூலின் முதற்பிரதியை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வெளியிட்டு வைக்க தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பெற்றுக் கொண்டனர். (36)

## கேணல் ராயுவின் 2ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் உடுவில் பிரதேச தே.எ. பேரவையின் வீரமுரசு நிகழ்வும்


கேணல் ராயு அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும், உடுவில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் வீரமுரசு நிகழ்வும் 12.09.2004 மாலை 7.30 மணிக்கு ஏழாலை மகாவித்தியாலய மைதானத்தில் உடுவில் பிரதேச தே.எ பேரவையின் செயலாளர் திரு.செ. செல்வரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதன் போது பொதுச்சுடரினை யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர்.திரு.சி. செம்மணன் அவர்களும் சட்டத்தரணி திரு. வாதவூரர் அவர்களும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து கேணல் ராயு அவர்களின் திருவுருவப்படத்திற்கு அவரது சகோதரி கோமளவல்லி அவர்கள் சுடர் ஏற்றி மாலை அணிவித்தார். தொடர்ந்து ஏனைய அப்பகுதி மாவீரர்களின் திருவுருவப்படங்களிற்கு மாவீரர்களின் உரித்தானவர்கள் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டு நினைவுக்கூட்ட நிகழ்வு ஆரம்பமானது. தே.எ பேரவை செயலாளரின் தலைமை உரையினைத் தொடர்ந்து சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் பார்த்தீபன் அவர்களும், யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி கலைவிழி அவர்களும் நினைவுரைகளை வழங்கினார். தொடர்ந்து சிறப்புரையினை யாழ். மாவட்ட துணை அரசியற் பொறுப்பாளர் வழங்கினார். அதனைத் தொடர்ந்து கலை பண்பாட்டுக்கழக மகளிர் பிரிவினரின் “ சங்குநாதம்” நிகழ்வு நடைபெற்றது. மிக உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற இந் நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (36)

## வரணி அம்மா கடையடிப்பகுதியில் விசமிகளின் அநாகரிகச் செயல்

வரணியில் உள்ள அம்மா கடையடி பேருந்து தரிப்பிடத்திலும் மற்றும் சந்தியில் உள்ள வர்த்தக நிலையைச் சுவர்களிலும் விசமிகள் கடந்த பல மாதங்களாக தகாத வார்த்தைகளை ஊரில் உள்ள மாணவிகள், பெண்களுடைய பெயர்களையும் இப்பகுதியில் உள்ள ஆண்களுடைய பெயர்களுடன் இணைத்து எழுதி வருவதால் இப்பகுதியில் வீண் குழப்பங்கள் பிரச்சினைகள் ஏற்படுவதாக தெரியவருகிறது.

இதனால் பலர் சம்பந்தமில்லாமல் பாதிக்கப்படுவதாகவும் இழிவுபடுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இச் செயலை செய்துவரும் விசமிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கொடிகாமம் பிரதேச அரசியற் துறைப் பணிமனையில் முறைப்பாடு செய்துள்ளனர். சம்பந்தம் இல்லாத பெயர்களை விசமிகள் சுவர்களில் எழுதுவதால் பெயர்களுக்கு சம்பந்தப்பட்டவர்கள் பெயர்கள் அழிப்பதற்கு கழிவு ஒயில்களைப் பயன்படுத்துவதால் பேரூந்து தரிப்பிடம் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரியவருகிறது. இந்த இழிவுச் செயலை செய்ய வரும் நபர்கள் குறித்து கண்டறிய அரசியற் துறையினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது (28)



நல்லூர்க்கந்தனின் தேரோட்டம், அலைமோதும் மக்கள் திரள்.

## பிணக்குகளுக்குக் காரணமான சக்திகள் குறித்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்

–கொடிகாமம் அரசியல் துறைப் பொறுப்பாளர்–

(தென்மராட்சி)

விடுதலை வேண்டி சுதந்திர வேள்வியில் காத்திருக்கும் எம் மக்களுக்கு சில இடங்களில் ஏற்படும் கோஷ்டிப் பிரிவினைகள், சண்டைகள் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளதென கொடிகாமம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்

தமிழினத்தின் விடுதலையை தலைவர் அவர்களின் பாதையில் வேண்டிக்காத்திருக்கும் தமிழ் மக்களுக்கு இப் பிரதேசத்தின் சிலசில இடங்களில் ஏற்பட்டு வரும கோஷ்டிப் பிரிவினைகள், வன்முறைகள், சண்டைகள் மிகுந்த வேதனையை ஏற்படுத்தி உள்ளதாக அவர் தெரிவித்தார்.

உண்மையான விடுதலையின் நோக்கத்திற்கு இச் சம்பவங்கள் பெரும் அபகீர்த்தியையும் ஏற்படுத்தும் எனவும் இனப்பிரச்சினைகளைத் தவிர்த்து இதற்கு காரணமான சக்திகளை இனங்கண்டு எச்சரிக்கையுடன் மக்கள் இருக்கவும் அமைதியும் ஒற்றுமையும் இன்றையகால கட்டத்தின் தேவையாக இருப்பதால் அனைத்து மக்களும் சகோதரமனப்பான்மையுடன் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் எனவும் தெரிவித்தார். கடந்த சில நாட்களாக வடக்கு மிருசுவில் பகுதியில் ஏற்பட்டு வரும சிறு பிரச்சினைகள் குறித்தே அவர் இக்கருத்தை தெரிவித்துள்ளார் .(28)

## ஈ.பி.டி.பி.யினருக்கு யாழ்.இல் இராணுவப் பாதுகாப்பு அதிகரிப்பு

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள ஈ.பி.டி.பி தேசவிரோதக்குழுவின் உறுப்பினர்களுக்கான இராணுவம் மற்றும் பொலிஸ் பாதுகாப்புக்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இவர்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு அதிகபட்ச இராணுவப்பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதுடன், அவர்கள் நடமாடும் வாகனங்களுக்கும் பூரண படைப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்தேசவிரோத சக்திகளுக்கான தமது பாதுகாப்பை வழங்கும் படையினரது செயற்பாடுகுறித்து பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# இளம் சந்ததிக்கு தமிழறிவு ஊட்டும்

# கனடா தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி

புலம் பெயர்ந்து கனடா நாட்டில் வசித்துவரும் எமது மக்கள் தாயகத்தில் பின் பற்றிய- பின்பற்றுகின்ற கலை-கலாசாரத்தையும், தாய்மொழியான தமிழ் மொழியையும் மறந்து விடக் கூடாது. தாயகத்தில் வாழ்கின்ற எமது உறவுகள் பின்பற்றுவதைப் போலவே புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் உறவுகளும் பின்பற்ற வேண்டும் என்பதனை முக்கிய நோக்கமாகக் கொண்டே கனடா தமிழ்க்கலைதொழில்நுடபக்கல்லூரி கடந்த பன்னிரண்டு வருடங்க ளுக்கு மேலாக செயற்பட்டு வருகிறது என கனடா தமிழ்க் கலைதொழில்நுட்பக்கல் லூரி இணைப்பாளர் கேதாதரன் அவர்கள் அண்மையில் கனடாவில் இருந்து தாயகம் வந்திருந்த வேளை ஈழநாதம் நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித் துள்ளார். கனடாவின் தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரியின் செயற்பாடுகள் தொடர்பாக அவர் கூறியவற்றை இங்கே தருகிறோம்.

*** கனடாவில் இயங்கிவரும் தமிழ்க்கலைதொழில் நுட்பக் கல்லூரியின் செயற்பாடுகள் எப்படி இருக்கின்றன?**



கல்லூரியின் தமிழ் மாணவர்கள்

கனடா நாட்டிலே வாழ்கின்ற புலம் பெயர் மக்களாகிய நாம் எமது தாய் நாட்டில் பின்பற்றிய கலை-கலாசார விழுமியங்களும், தாய் மொழியான தமிழ்மொழியும் அழிவடைந்து விடக்கூடாது ; எமது மக்கள் வெளிநாட்டு மொழி, கலை-கலாசாரத்தில் மூழ்கி எமது இனத் தின் தனித்துவத்தை இழந்து விடக்கூடாது என்பதற்காக இக்கல் லூரி 12 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரியில் பல்வேறு துறைகள் உள்ளன. உலகத்தமிழர் அமைப் பின் ஒரு உப அமைப்பாக செயற் பட்டுவரும் இந்தக்கல்லூரியில் அதிகளவானவர்கள கல்விகற்கின் றனர். இதில் மொத்தமாக 4000 இற்கும் அதிகமானவர்கள் கல்வி கற்கின்றனர். கனடா முழுவதிலுமாக இந்தக் கல்லூரி யின் பதினொரு கிளைகள் இயங்கிவருகின்றன.

***.இந்தக் கல்லூரி ஆரம்பிக் கப்பட்டதன் நோக்கம் எந்தளவில் நிறைவேறியிருக்கிறது?**

இந்தக் கல்லூரியில் கல்விகற் கின்ற 4000 பேரும் தமிழ் படிக்கின் றனர். தமிழ்க்கல்வியை ஆண்டு - 01-13 வரை கற்பித்து வருகிறோம். மூன்று தரங்களை தமிழ்மூலம் வழங்குகிறோம். இதன் மூலம் அவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் செல்கின்றனர். சொந்த நாட்டிலி ருந்து புலம் பெயர்ந்து வந்து இங்கே வசிக்கின்றவர்கள் இப் போது கவிதை எழுதுகின்ற அள விற்குத் தமிழ்ப்புலமை பெற்று வருகின்றனர். அதேவேளை நடனம், நாடகம் போன்ற கலை வடிவங்களிலும் சிறப்புப் பெற்றி ருக்கிறார்கள். இவர்கள் முற்று முழுதாக கல்லூரியின் நோக்கத்தை நிறைவேற்றாவிட்டாலும், ஒரளவுக்

**நேர்காணல் அ.லோகீசன்**

கேனும் அதன் நோக்கத்தை நிறைவேற்றுகிறார்கள்.

*** இதன் எதிர்காலத்திட்டங்கள் எப்படி இருக்கப்போகின்றன?**

இப்போது இந்தியா மனோன் மணியம் சுந்தா பல்கலைக்கழக த்துடன் சேர்ந்து கலைமாணிப் பாடத்தை நடத்தி வருகிறோம். இதன் மூன்றாவது கட்டம் இப்போது நடைபெற்றுவருகிறது. இது போன்ற பல்கலைக் கழகங்களு டன் இணைந்து இந்த மாணவர் களின், தமிழ்த்துறை சார்ந்த அறிவை யும், கலாசார விழுமியங்களையும் அதிகளவில் போதிப்பதற்கான திட்டங்களை வகுத்து அதற்கமை வாக இந்த மாணவர்களை வழி நடத்துவது தான். அத்துடன் இந்தக்கல்லூரி இப்போது பகுதி நேரமாகவே இயங் கிவருகிறது.


இணைப்பாளர்

இதனை முழு நேர மாக மாற்று வது எமது அடுத்த கட்டத் திட்டமாக இருக்கி றது இவ்வாறு முழு நேரமாக மாற்று வதன் மூலம் எமது மொழியையும், கலை பண்பாட் டையும்எமது மாண வர்களுக்கு அதிக ளவில் ஊட்ட முடி யும் அதற்கு அடுத்த படியாக இந்தக் கல்லூரியை ஒரு பல்கலைக்கழக மாக மாற்றி தமிழீ ழத்திற்குப் பெருமை சேர்ப்பது தான் எமது இலக்கு.

***. இவ்வாறு பெரிய கல்லூரி ஒன்றை இயக்கிவருகிறீர்கள். அதன் செயற்பாடுகளுக்கான நிதி யுதவி எங்கிருந்து கிடைக்கிறது?**

எந்த ஒரு அரச நிதியுதவியும் எமக்குத் தரப்படுவதில்லை. மாணவர்களிடமிருந்து பெறப் படுகின்ற பணத்தை வைத்துக் கொண்டுதான் நாம் இதனை இயக்கிவருகிறோம். இதன் பதினொரு வளாகங்களையும் மாணவர்களும் பெற்றோர்களும் தான் நிதியுதவி செய்து இயக்கு கிறார்கள். தமிழ் மொழி கற்பிப் பதற்கு மாத்திரம் 209 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சேவை மனப்பாங்கில் தான் கடமை யாற்றுகிறார்கள்.

***.தமிழையும், அதன் கலாசார விழுமியங்களையும் பேண வேண்டும் என்பதற்காக இந்தக் கல்லூரியை இயக்கிவருகிறீர்கள். உங்களது இந்த முயற்சிக்கு கனடா வாழ் தமிழ் மக்கள்எந்த அளவில ஒத்துழைப்பை வழங்குகிறார்கள்?**

கனடா வாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எமது இந்த முயற்சிக்கு ஓரளவு குறிப்பிடும் படியான ஒத்துழைப்பை வழங்கி வருகிறார்கள். ஆரம்ப காலங் களை விட இப்போதுதான் குறிப்பாக இரண்டு மூன்று வருடங் களின் முன்னர் தான் அங்கிருக் கின்ற பெற்றோர்களுக்கு இந்தக் கல்லூரியில் இணைந்து தமது பிள்ளைகள் தமிழையும் கலை கலாசாரத்தையும் கற்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்திருக் கின்றது. அதற்கான காரணம் என்னவென்று பார்த்தால் எமது இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த யுத்தம் நீக்கப்பட்டு இப்போது அமைதி நிலவி வருகிறது. இந்த நிலையில் புலம்பெயர்ந்து சென்ற வர்கள் மீண்டும் தமது தாய் நாட் டிற்கு வந்து தமது உறவுகளை பார்த்து வருகின்ற சூழல் ஏற்பட்டிருக்கிறது. இதனால்



கனடாவில் இருந்தும் பெருமள வானவர்கள் இங்கே வருகின்ற னர்.அவர்கள் இங்கே வருகின்ற போது தமது பிள்ளைகள் தமிழில் கதைக்க வேண்டும் தாயகத்தில் இருக்கின்ற கலை, பண்பாட்டு நடைமுறைகளுடன் ஒத்து நடக்க வேண்டும் என்ற நோக்கில் சிந்தித்து இப்போது தான் கல்லூரியில் கூடுதலானவர்கள் தமது பிள்ளைகளை இணைத்து வருகின்றனர். இங்கே படிக்கின்ற பிள்ளைகள் ஆண்டு 01-03 வரை மிகுந்த அக்கறையுடன் தமிழைப் படிக்கிறார்கள். பின்னர் கனடா நாட்டின் சூழலுக்கு ஏற்ப பிள்ளை கள் தமிழைப்படிக்க தயக்கம் காட்டுகிறார்கள். பின்னர் 08ஆம் வகுப்பளவில் தாம் பல்கலைக் கழகம் போகவேண்டும் என்பதற் காக தமிழைப் படிப்பதற்கு முயல் கின்றனர்.

***கனடா நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மத்தியில் தமிழையும் கலை பண்பாட்டையும் வளர்க்க வேண்டும் என்று அங்கே செயற் பட்டு வருகிறீர்கள். இந்த நிலையில் தமிழீழத்தின் செயற்பாட்டுக்கும் அதற்கும் இடையில் எத்தகைய உறவுகள் இருக்கின்றன?**

தமிழீழ கல்விக் கழகத்தின் ஆதரவுடனும் ஆலோசனையுடனும் தான் எமது கல்லூரியின் செயறபாடு கள் அமைந்திருக்கின்றன.

***தாயகத்தில் கல்வி கற்கின்ற மாணவர்கள் மிகுந்த வசதிக் குறை வுடன் (தளபாட, கட்டட, ஆசிரியர் பற்றாக்குறையுடன வறுமை நிலை யில் தான் கல்வியை தொடர்கிறார் கள். இவர்களுக்கு கனடாவில் உள்ள உங்கள் கல்லூரியால் உதவ முடியுமா?**

உதவி புரிவதற்கு எமக்கு மிகுந்த விருப்பம் இருக்கிறது. ஆனால் இதுவரை நாம் எந்த உதவிகளையும் மேற்கொள்ளவில் லை. ஏனெனில் எமது கல்லூரியை பெற்றோர், மாணவர்களின நிதியுத வியுடன்தான் நடத்தி வருகிறோம். இந்தக் கல்லூரிக்கு பொறுப்பாக இருப்பவர் இங்கே துன்பப்படுகின்ற மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர். எனவே எமது எதிர்கால நடவடிக்கைகளில் நாம் சில உதவிகளை வழங்குவோம்

# மருதங்கேணி பொதுச் சந்தையை புனரமைத்துத் தர வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

தாளையடி மருதங்கேணிப் பகுதிக்குரிய பொதுச்சந்தை இது வரை காலமும் புனரமைக்கப்படாத தால் அப்பகுதி மக்கள் பெரும் கஷ்ரங்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பின் போது மிகவும் மோசமாகப் பாதிப்படைந்து கட்ட டங்கள் அனைத்தும் இடிக்கப்பட்ட நிலையில் காணப்படும் இச்சந் தைக்குரிய கட்டடப்பகுதிகள் முன்பு இர [illegible]ுவத்தினரின் காவலரண் கள[illegible]வும் அமைந்திருந்தன. தற் பே[illegible] இப்பகுதி விடுவிக்கப்பட்ட நில[illegible]யில் அக்காவலரண்கள் அ[illegible]றப்படாது தற்போதும் காணப்படுகின்றது. மக்கள் மீள் குடியமர்ந்து 4வருடமாகியும் பொதுச்சந்தை புனரமைக்கப்பட வில்லை.இதனால் அப்பகுதி மக்கள் சந்தை வசதியின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.ஏ9 பிரதான சாலைக்கும் இப்பகுதிக்கும் இடையேயான தூரம் 05 கிலோ மீற்றருக்கு மேலாக உள்ள இதேவேளை பிரதானசாலையிலி ருந்தும் பளைப்பகுதிச் சந்தைக்கே மக்கள் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு இப்பகுதிக்குரிய போக்குவரத்துக் கான பேருந்துப் பணியும் குறை வாக இருப்பதனால் குறித்த நேரத் தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாக இவர் கள கூறுகின்றனர். (சதீ)

# நியாப் திட்ட வேலைகள் மந்த கதியில் நடைபெறுகின்றன

(முள்ளியவளை)


கரைதுறைப் பற்றுப் பிரதேசத் தில் நியாப்திட்டத்தின் கீழான 2003 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி புனரமைப்பு வேலைகள் மந்த கதியில் நடைபெற்றுவருகின்றன.

மேற்படி நிதி ஒதுக்கீட்டில் கரைதுரைப்பற்றுப் பிரதேசத்துக் குட்பட்ட முள்ளியவளைப் பிரதே சத்தில் முள்ளியவளை தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பொது நோக்கு மண்டப வேலைகள் இவ் வாண்டு நடுப்பகுதியைத் தாண்டி யும் முடிக்கப்பட்டு திறக்கப்படாத நிலையில் உள்ளதுடன் பொதுக் கிணறுகளும் ஏனோ தானோ என்ற நிலையில் உள்ளன.

இதுபோன்று முள்ளியவளை வடக்கு, முள்ளியவளை மேற்கு, முள்ளியவளை மத்தி கிராம அலுவலர் பிரிவுகளில் அமைக் கப்பட்டு வரும் பொதுமண்டப வேலை கள் முடிவடையாத நிலையில் உள்ள துடன் அவ்வப்பகுதியில் அமைக் கப்பட்ட சில பொதுக் கிணறுகள நீரின்றிக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஆ)




**மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் மொத்தம் 12 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியிலும் 14 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்தத் தொடரில் பங்கேற்கும் அணி வீரர்கள் விபரம்.**




* **அவுஸ்திரேலியா:-** ரிக்கி பொண்டிங் (அணித் தலைவர்) அடம் கில் கிறிஸ்ட், மைக்கல் கிளார்க், ஜேசன் கில்லெஸ்பி, இயான் ஹார்வி, மத்யூ ஹையடன், பிராட் ஹொக், மைக்கேல் காஸ்ப்ரோவிச், பிரெட்லீ, டேமியன் மார்ட்டின்,டேரன்லேமான், கிளான்மெக்ராத், ஆன்ட்ரூசைமண்ட்ஸ் மற்றும் ஷேன் வாட்சன்.



* **வங்கதேளாதேஷ்:-** ரஜின் சலே (அணித் தலைவர்), முகமது அஷ்ரபுல், ஜாவேத் ஓமர், நபீஷ் இக்பால், அப்தாப் அகமது, பைசல் ஹுசைன், முஸ்பிகார் ரஹ்மான், காலேத் மஹ்முத், காலேத் மசூத், முகமது ரபிக், மஞ்சுரல் இஸ்லாம் ராணா,தபாஷ் பைஸ்யா, தாரிக் அஜீஸ்,மற்றும் நஜ்முல் ஹொசைன்.



* **இங்கிலாந்து:-** மைக்கல் வோன் (அணித் தலைவர்), ஜேம்ஸ்ஆன்டர்சன், கிரிட்பேட்டி, போல் கோலிங்வூட், ஆன்ட்ரூ பிளின்டொப்,ஆஷ்லே கைல்ஸ், டாரன் கப்,ஸ்டீபன்ஹார்மிசன், ஜெரைன்ட் ஜோன்ஸ், ஆன்டனி மெக்ராத்,விக்கிரம் சோலங்கி, ஆன்ட்ரூ ஸ்ட்ரோஸ்,மார்கஸ் ரெஸ்கோதிக் மற்றும் அலெக்ஸ் வார்ப்.



* **இந்தியா:-** சவுரவ் கங்குலி(அணித் தலைவர்), அஜித் அகார்கர், ராகுல் ராவிட், ரோகன் கவாஸ்கர், ஹார்பஜன் சிங், முகமது கைப், தினேஷ் கார்த்திக், அனில் கும்ளே, வி.வி.எஸ். லட்சுமன், ஆஷிஷ் நெய்ரா, இர்பான் பதான், வீரேந்திர சேவாக், அமித் பண்டாரி மற்றும் யுவராஜ் சிங்.




* **கென்யா:-** ஸ்டீவ் டிகோலோ (அணித் தலைவர்),ஜோஸ்பட் அபாபு,ரகீப் அகா, ஹிடேஷ் மோடி, தாமஸ்ஒடோயோ, பீட்டர் ஆன்கோன்டோ, லாமெக் ஆன்யன்கோ, கென்னடி ஒடினோ, மவுரிஸ் ஓமா, பிரிஜல் பட்டேல், மல்ஹர் பட்டேல், ரவிந்து ஷா, மார்ட்டின சுஜி மற்றும் டோனிசுஜி.



* **நியு,சிலாந்து:-** ஸ்டீபன் பிளமிங் (அணித் தலைவர்), நாதன்ஆஷ்லே, இயான் பட்லர், கிறிஸ் கெய்ன்ஸ், கிறிஸ்ஹாரிஸ், ஹமிஸ் மார்ஷல், பிரன்டன் மெக்கல்லம், கேரிக்மெக் மில்ஸ், கைல் மில்ஸ், ஜேக்கப் ஓரம், மைக்கேல் பார்ஸ், ஸ்காட் ஸ்டைரிஸ், டேரல் டபி மற்றும் விட்டோரி.



* **பாகிஸ்தான்:-** இன்சமாம் உல் ஹக், (அணித்தலைவர்), அப்துர் ரசாக், அசார் முகமது, இம்ரான் பர்க்கத்,முகமது சமி,மோயின் கான், நவீத் உல் ஹசன், சல்மான் பட், சயீத் அப்ரிதி,சோய்ப் அக்தர், யாசிர் ஹமித், யுனிஸ் கான், மற்றும் யூசப் யுகனா.



***தென்னாபிரிக்கா:-**கிரேம் சிமித் (அணித் தலைவர்), மார்க்பௌச்சர், நிக்கிபோஜே, ஆலன் டாசன் ஜீன்பால் டமினி, கிப்ஸ், ஜாக்ஸ் காலிஸ், லான்ஸ் குளூஸ்னர்,கார்ல்லாங்கிவெல்ட், மகாயாநிடினி, ராபின்பீட்டர்சன், ஷோன்பொலக், ஜாக்ஸ் ருடால்ப் மற்றும் மார்டின் வான்ஜெரால்ட்,



* **இலங்கை:-** மாவன்அத்தப்பத்து (அணித் தலைவர்), உபுல் சந்தன, திலகரத்ன தில்ஷான், தில்ஹார பெர்னாண்டோ, அவிஷ்க குணவர்த்தன, சமன்ஜெயந்த, சனத்ஜெயசூரிய, ஜெயவர்த்தன, லோகுராட்சி, பர்வீஸ் மஹ்ருப், லசித் மாலிங்க, சமிந்தவாஸ் மற்றும் நுவன் சொய்சா.



* **அமெரிக்கா:-** ரிச்சட்ஸ்டாபில் (அணித் தலைவர்), அஜாஸ் அலி, ரோகன் அலெக் சாண்டர், ஜமின் அமின், இம்ரான் அவான், ஹேவர்ட் ஜான்சன், மார்க் ஜான்சன், கிளைடன் லாம்பர்ட், ஸ்டீவ்மாசியா, நசீர் இஸ்லாம், நசீர் ஜாவித், ரஜித் ஜியா, கார்லஸ் ரீட், லியான் ரோமிரோ.



* **மேற்கிந்தியத்தீவு:-** பிரைன் லாரா (அணித் தலைவர்), இயான் பிராட்ஷா, டீவேனி பிராவோ, கார்ட்னே பிரோனி, சிவ்நரைன் சந்தர்போல், கோரே கோலிமோர், மார்வின் தில்லான், கிறிஸ் கெய்ல், ரியான் ஹிண்ட்ஸ், வேவெல் ஹிண்ட்ஸ், சில்வெஸ்டர் ஜோசப், ரிக்கார்டோ பவல், ராம்நரேஷ் சர்வான் மற்றும் டாரன்சம்மி.



* **சிம்பாப்வே:-**டெட்டண்டாதைபு (அணித்தலைவர்), எல்டன் சிகும்புரா, டியான் இப்ராகிம், டக்லஸ் ஹொண்டோ, அலெஸ்டர் மரிக்வடே, ஸ்டுவர்ட் மட்சி கென்யேரி, டவான்டா முபாரிவா, மலுலிகி என் காலா, டினாசி பன்யன்கரா, எட்வர்ட் ரென்ஸ் வோர்ட், சிபான்டா, பிரன்டன் டெய்லர், உட்சயா, மார்க் வெர்முலன்.

# ஜெயிக்கப்போவது யார்?

மினி உலகக்கிண்ணம் என அழைக்கப்படும் ஐ.சி.சி சம்பியன் போட்டி மழை மற்றும் வெயில் என மோசமான காலநிலையுடன் இங்கிலாந்தில் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

பலம் குன்றிய அணிகள் முறையாக வகைப் படுத்தப்பட்டுப் போட்டி அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளமையால் முன்னணி அணிகளுக்கு அதிர்ச்சி தரும் முடிவுகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை.

நடைபெற்று முடிந்த போட்டியில் தொடக்க ஆட்டத்தில் நியூசிலாந்து அணி மாத்திரம் தனது உச்சத்திறனை வெளிப்படுத்தியது. அவ்வணி அமெரிக்காவை 210 ஓட்டங்களால் தோற்கடித்தது. அமெரிக்க அணியைப்பொறுத்த வரை இது அறிமுக ஆட்டமாகும்.



இதனை விட இங்கிலாந்து இந்திய,தென்னாபிரிக்க அணிகளும் சிறப்பான வெற்றிகளைப் பெற்று அரையிறுதிக்கு முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டுள்ளன.

இவ்வணிகளுக்கு இனித்தான் பலப்பரீட்சை காத்துள்ளது.நியூசிலாந்து அணி அவுஸ்திரேலியாவையும், இங்கிலாந்து அணி சிறிலங்காவையும், இந்திய அணி பாகிஸ்தானையும், தென்னாபிரிக்க அணி மேற்கிந்தியத் தீவுகளையும் இரண்டாவது போட்டியில் எதிர்த்தாடவுள்ளன.

எனவே இவற்றில் வெற்றி பெற்றால் மாத்திரமே அரையிறுதிக்கான வாய்ப்பைப் பெறமுடியும்.

சிலவேளை அவுஸ்திரேலியா, சிறிலங்கா, மேற்கிந்தியத்தீவுகள், பாகிஸ்தான் அணிகள் பலம் குறைந்த நாடுகளிடம் அதிர்ச்சித் தோல்விகளைச் சந்தித்தால் முடிவுகள் தலைகீழாக மாறும். கிரிக்கெட்டில் எதுவும் நடக்கலாம் தானே.

இதுவரை அதிர்ச்சி தரும் முடிவுகள் எதுவும் பலமான அணிகளுக்கு ஏற்படாத நிலையில் கிண்ணத்தைக் கைப்பற்றப்போகும் அணி எது என்பதில் குழப்பமான நிலையே இதுவரை காணப்படுகின்றது.




கிரிக்கெட் வல்லுனர்களின் கருத்துக்களின் படி அவுஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கே அதிக வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணியைப் பார்த்தால் இவ் ஆண்டு 21 ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டு மூன்று போட்டிகளில் மாத்திரமே தோல்வி அடைந் துள்ளது. இது அவ் அணிக்கான சாதகத் தன்மையைச் சந்தேகத்துக்கிடமின்றி எதிர்வுகூறக் காரணமாகின்றது. இங்கிலாந்து அணியைப் பொறுத்தவரை போட்டிகள் தமது தாயகத்தில் நடப்பதும், அண்மைக் காலமாகத் தொடர் வெற்றிகளைக் குவித்துவருவதும் இங்கிலாந்து அணிக்கு சாதகமான நிலையைத் தோற்றுவித்துள்ளது.

அத்துடன் இவ்வணியில் பிளிண்டொப், கொலிங்வூட், சோலங்கி, ஹார்மிசன் போன்ற வீரர்கள் தொடர்சியாக ஜொலித்து வருவதால் எளிதில் எதிரணிக்கு வெற்றி சென்றடைவது என்பது கடினமான ஒன்றாகவே இருக்கும்.எனினும் மற்றைய அணிகளான சிறிலங்கா, இந்தியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளையும் குறைத்து மதிப்பிட முடியாது.

இவ்வணியின் துடுப்பாட்டப் பந்து வீச்சு வரிசை மீண்டும் பலம் பெற்றுள்ள நிலையில் எதுவும் நடக்கலாம். இந்த நிலையில் மினி உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றப் போவது அவுஸ்திரேலியவா? இங்கிலாந்தா? என்ற நிலையை ஆசிய நாடொன்று மாற்றி விடுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# தலைமைக்கான போராட்டமா?

நடைபெறும் மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் கணிசமான லீக் போட்டிகள் முடிவடைந்துள்ளன. அனைத்துப் போட்டிகளிலும் பலமான அணிகள், பலமற்ற



அணிகளை இலகுவில் வெற்றிகொண்டுள்ளன. பலமற்ற அணிகள் எனக்கூறப்பட்டாலும் சிம்பாப்வே ஓரளவு பலமான அணியென்றே கூறலாம். அவ்வணியை 152 ஓட்டங்களால் வென்று இங்கிலாந்துதலைநிமிர்ந்து நிற்கின்றது. அதுபோல் நியூசிலாந்து அணி 210 ஓட்டவித்தியாசத்தில் அமெரிக்காவை வென்றுள்ளது. இந்தியா கென்யாவை 98 ஓட்டங்களால் வெற்றிபெற்றிருப்பினும் கென்யாவின் விக்கெட்டுக்கள் அனைத்தையும் இந்தியாவால் பறிக்கமுடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது. இனிவரும் லீக்போட்டிகள் அதாவது, இன்றும்நாளையும் நடைபெறும் போட்டிகளில் பாகிஸ்தான் சிறிலங்கா-மேற்கிந்திய அணிகள் வெற்றிபெறுவது உறுதியாகும்.

அடுத்துவரும் நான்கு போட்டிகளுமே நீயா? நானா? என்ற சவால் நிறைந்தவையாகக் காணப்படும். ஆனால் இதில் கவனிக்கப்பட வேண்டியது என்ன வென்றால் இறுதி லீக் போட்டியில் சந்திக்கவுள்ள இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெறும் போட்டி எவ்வாறு அமையப்போகும் என்பதே.



மிக அண்மையில் இரு நாடுகளும் சந்திக்கும் 3ஆவது போட்டி இதுவாகும். பாகிஸ்தான் ஒரு போட்டியில் 58 ஓட்டங்களாலும், இன்னும் ஒரு போட்டியில் 66 ஓட்டங்களாலும் இந்திய அணியை வென்றுள்ளது.

அதிலும் இந்தியாவின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் இல்லாத போட்டி ஒன்றிலும், பங்கேற்ற போட்டி ஒன்றிலும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 19 ஆம் திகதி பாகிஸ்தானுடனான போட்டிக்கான அணியில் சச்சின் டெண்டுல்கரைத் துடுப்பாட்ட வரிசையிலும் பாலாஜியை பந்து வீச்சு வரிசையிலும் இழந்துள்ள நிலையில் இப்போட்டி இந்தியாவுக்கு பாரிய சவாலாகவே இருக்கும்.

எனினும் இவ்விரு வீரர்களும் இல்லாத போதிலும் இருப்பவர்களைக் கொண்டு சிறப்பாக ஆடி பாகிஸ்தானை வீழ்த்த கங்குலியின் தலைமைக்கு முடியுமாயின் அடுத்துவரும் போட்டிகளையும் எதிர்பார்க்க முடியும் என்பதோடு கங்குலியின் தலை(மை)யும் பாதுகாக்கப்படும்.

**வடிவேல்.**

-தேர்தல் ஆணைக்குழுவை அமைக்காமை குறித்து-

# ஜெனிவா மனித உரிமைகள் நீதிமன்றத்தில் சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் வழக்கு

(கொழும்பு)

**தன்னை தொடர்ந்தும் தேர்தல் ஆணையாளராக வைத்திருப்பதற்கு எதிராக ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் நீதிமன்றத்தில் சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் வழக்குத் தொடரத் தீர்மானித்துள்ளார்.**

சிறிலங்காவின் அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச்சட்ட மூலத்துக் கேற்ப உருவாக்க வேண்டிய தேர்தல் ஆணைக்குழு உருவாக்கப்படாத நிலையில் மாற்றுவழிகளைக் கொண்டு தேர்தல் திணைக்களத்தை நடத்துவதற்கு தம்மை பணியில் வைத்திருந்தமை தொடர்பாக தயானந்த திசாநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீதான உயர் நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகக் கூறி ஜெனிவாவிலுள்ள மனித உரிமை நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய திசாநாயக்க தீர்மானித்துள்ளார். மனிதஉரிமை பேணல் சங்கத்தின் பிரபல நீதிபதிகளைக் கொண்ட குழுவினர் தயாரித்துள்ள மேற்படி மனுவில் தனிப்பட்ட நபர் ஒருவர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்து, அதற்கு சாதகமான தீர்ப்பு வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

17ஆவது திருத்தச்சட்ட மூலத்தின் படி தேர்தல் ஆணைக்குழுவை அமைக்காது விட்டமை, 25 ஆவது பிரிவின் படி தேர்தல் ஆணையாளரின் நிறைவேற்று அதிகாரத்தை தடுத்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### ஹக்கீம் நிபந்தனை

அரசில் பங்கேற்க எமக்கு அரசு வேண்டுகோள் விடுக்குமானால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் பொழுது முஸ்லிம்களை தனித்தரப்பாக ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்றுக கொள்ள வேண்டும் என மு.கா. தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்ற குழுக்களுக்கு எதிர்க்கட்சி அங்கத்தவர்கள்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் இரண்டு பிரதான குழுக்களுக்கு எதிர்க்கட்சி அங்கத்தவர்களையும் நியமிப்பதற்கு அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளதென ஐ.தே.கட்சி அறிவித்துள்ளது.

சிறிகோத்தா வட்டாரங்கள் தகவல் வெளியிடுகையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் அரசாங்க கணக்காய்வுக்குழுவின் தலைவராகவும், அரச நிறுவனங்கள் மதிப்பீட்டுக் குழுத் தலைவராக கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்கவும் நியமிக்கப்படுவார்களெனத் தெரிவித்துள்ளன.

பாராளுமன்ற சிறப்புரிமைகள் குழுவின் தலைவராக ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம் பொலிஸ் அதிகாரி பணி நிறுத்தம்

(கொழும்பு)

ஹிங்குராங்கொட பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரி ஒருவர் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அண்மையில் சிறுவன் ஒருவனை முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார். இது தொடர்பாக ஹிங்கு ராங்கொட காவல்மையத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்ட போது சந்தேக நபரைக் கைது செய்த குறிப்பிட்ட அதிகாரி அவரை எவ்வித விசாரணையும் இன்றி விடுவித்துவிட்டார். அத்துடன் பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சிறுவனை அந்த அதிகாரியும் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக முறையிடப்பட்டதை அடுத்தே குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

## சர்வதேச நாணயநிதியப் பிரதிநிதிகள் ஜே.வி.பி.பிரதிநிதிகளுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியின் பிரதிநிதிகளை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர். இந்த சந்திப்பு அடுத்து வரும் வாரத்தில் இடம்பெறவுள்ளது. சிறிலங்காவில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி ஜெரமி காட்டர், ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச மற்றும் கலாசார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்பாடுகள் சிறிலங்காவின் இறைமையை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே அந்த செயற்றிட்டங்களை தாம் எதிர்ப்பதாகவும் ஜே.வி.பி முன்னர் எதிர்க்கட்சியில் இருக்கும் போது தெரிவித்து வந்தது. தற்போது ஆளும் கட்சியாக இருக்கின்ற போதும் சில வேளைகளில் ஜே.வி.பி சர்வதேச நாணய நிதியத்தின் சிறிலங்கா மீதான பொருளாதாரத் திட்டங்களை எதிர்த்து வருகிறது. இந்த நிலையிலேயே தற்போது இருதரப்பும் சந்திப்பு ஒன்றுக்கு தயாராகியுள்ளன. (32)

## நுரைச்சோலையில் பேருந்து மோதி மாணவன் பரிதாப மரணம்

*–மோதிய வாகனம் எரிக்கப்பட்டது*

(சிலாபம்)

புத்தளம் மாவட்டத்திலுள்ள கற்பிட்டி நகரிலுள்ள நுரைச்சோலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை தனியார் பேருந்து ஒன்று 13வயது நிரம்பிய மொகமட் ஜாசீர் எனும் பாடசாலை மாணவரை மோதிச் சென்றதில் மாணவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இதனையடுத்துக் குறிப்பிட்ட பஸ் பொதுமக்களால் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டது. இதன காரணமாக கற்பிட்டி நகரில பதற்ற நிலை ஏற்பட்டதுடன் நகரிலுள்ள அனைத்துக் கடைகளும் மூடப்பட்டன.

பின்னர் பொலிசார் வந்ததன் காரணமாக நிலைமை சுமுகமான நிலைக்கு வந்த போதிலும் இடையிடையே பதற்றநிலை ஏற்பட்டு மோதல்கள் இடம்பெற வாய்ப்புக்கள் தோன்றுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பஸ்சின் உரிமையாளர் முஸ்லிம் இனத்தவரென்றும், அதனை ஓட்டிச் சென்றவர் சிங்களவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

-சிறிலங்கா உட்பட ஏழு நாடுகள்-

## "பயங்கரவாதத்தை" ஒழித்துக்கட்ட கூட்டுச் செயற்குழு அமைப்பு

சிறிலங்காவும் மற்றும் ஆறு ஆசிய நாடுகளும் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டும் முகமாக கூட்டுச் செயற்குழு ஒன்றை அமைத்துள்ளன. இந்தக் குழுவில் இந்தியா, நேபாளம், பூட்டான், மியன்மார், பங்களாதேஷ், தாய்லாந்து ஆகிய நாடுகளும் அங்கம் வகிக்கின்றன.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ராஜிப் சிக்றி இது பற்றி கருத்துத் தெரிவித்த போது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் அடங்கலாக அனைத்து விடயங்களையும் இந்தக் குழு ஏற்கனவே ஆராய்ந்திருப்பதாகத் தெரிவித்த அவர் தீவிரவாதிகள் நாடுகளின் எல்லைப்புறங்களில் பாதுகாப்பற்ற நுழைவாயில்களை தமக்குச் சாதகமாக பயன்படுத்துகிறார்களென்று தெரிவித்ததுடன், இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த சகல நாடுகளும் இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். சிறந்த தகவல் தொடர்பு வசதிகள் இத்தகைய ஊடுருவல்களை தடுப்பதற்கு உதவுமென்றும், நாடுகளின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகள் இது குறித்து முனைப்பாக இருக்கவேண்டுமென்றும் ராஜிப் சிக்றி மேலும் கூறினார்.

## அமெரிக்க சனாதிபதியைச் சந்திக்க சந்திரிகா எடுத்த முயற்சி தோல்வி

அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ள சிறிலங்கா சனாதிபதி, அந்நாட்டு சனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை சந்திப்பதற்கு மேற்கொண்ட முயற்சி கைகூடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட கூட்டத்தொடர் ஒன்றில் கலந்து கொள்வதற்காக அடுத்த வாரம் அமெரிக்கா செல்லவுள்ள சனாதிபதி, இந்த விஜயத்தின் போதே சனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை சந்திக்க முயற்சிகள் மேற கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.சிறிலங்கா சனாதிபதிக்கான இந்தப் பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர், அமெரிக்க சனாதிபதியுடனான சந்திப்புக்கும் ஏற்பாடு செய்ய முயற்சித்த போதும், சனாதிபதி ஜோர்ஜ் புஷ் இதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தவாரம் நியூயோர்க் நகரில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை விசேட அமர்வில், சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும் கலந்து கொள்ளவுள்ள போதும், சிறிலங்கா சனாதிபதியைச் சந்திப்பதற்கு தமக்கு நேரமில்லை என்று தெரிவித்தே, இந்த ஏற்பாட்டுக்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறிலங்கா இராணுவத் தளபதி மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்கா படையினர் 33 பேர் இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட தமது மனித உரிமைகளை மீறியுள்ளதாக அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர்.

இராணுவத்தில் 8 வருடங்கள் சேவையாற்றிய பின் அவர்களுக்கு வழங்க வேண்டிய பதவி உயர்வுகளை 15 வருடங்களுக்குப் பிறகு வழங்க முன் வந்திருப்பது மனித உரிமைகளை மீறும் செயல் என அப்படையினர் தெரிவித்துள்ளரென லங்காதீப பத்திரிகை குறிப்பிடுகின்றது.


## பணிநிலை வேண்டுகை

வன்னிப் பெரு நிலப்பரப்பில் அமைந்துள்ள திரைப்பட வெளியீட்டுப்பிரிவு தொடர்பகங்களில் பணியாற்றுவதற்குத் தகுதியான ஆண்களிடம் இருந்து (வயது எல்லை 18-40 வரை) விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும்20.09.2004 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிடப்படும் எமது தொடர்பகங்களுக்கு அனுப்பி வைக்கவு

திரைப்பட வெளியீட்டுப்பிரிவு, தொடர்பகம், மருதங்கேணி, பளை, கிளிநொச்சி, விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கனகராயன்குளம், மல்லாவி, ஆண்டாங்குளம், முழங்காவில், கந்தபுரம், பூநகரி.

திரைப்பட வெளியீட்டுப்பிரிவு,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி. (5046)

## சந்திரோதயா விளையாட்டுக் கழக மாவீரர்கள் ஞாபகார்த்தமாக நடாத்தும் மாபெரும் உதைபந்து, கரப்பந்து (செற்றப்) வெற்றிக்கிண்ணப் போட்டி - 2004

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள சகல விளையாட்டுக்கழகங்களையும் இணைத்து, எமது கழகத்தில் விளையாடி வீரகாவியமான மாவீரர்கள் நினைவாக நடாத்தும் உதைபந்து (09 பேர் கொண்டது), கரப்பந்து (செற்றப்) போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 21.09.2004 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பாகப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு**:- உதைபந்து மாத்திரம் இரண்டு அணிகள் பங்குபற்றலாம். பதிவு செய்யப்படும் நாளன்று கட்டுப்பணம் 300/= செலுத்தவும்.

**பதிவு செய்யும் இடம்**:-குமரன் ரெக்ஸ்ரையில், யாழ்.சாலை,கிளி.பொது விளையாட்டு மைதானம் முன்பாக, போர்முரசு வாணிபம், D.8, உருத்திரபுரம் கிளிநொச்சி. (10221)

# ஸ்ரீநகர் இராணுவ முகாம் மீது
# தற்கொலைத் தாக்குதல்

(புதுடில்லி)

**இந்தியாவின் ஸ்ரீநகரில் டால் ஏரிப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாமிற்குள் நுழைந்து தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் பலியானதோடு, ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.**

காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகர் டால் ஏரிப் பகுதியில் அமைந்துள்ள மத்திய பாதுகாப்புப் படை (சி.ஆர்.பி.எப்) முகாம் மீது கடந்த சனிக்கிழமை இரவு இரண்டு தீவிரவாதிகள் திடீர்த்தாக்குதல் நடத்தினர். முகாமிற்குள் அதிரடியாக உள்ளே நுழைந்த இரண்டு தீவிரவாதிகளும் துப்பாக்கியால் சுட்டபடி சரமாரியாகக் கையெறி குண்டுகளை வீசினர். இதில் அசோக் என்ற வீரரின் ஒருகால் துண்டானது. பதிலுக்குப் பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளை நோக்கித் திருப்பிச் சுட்டனர். ஆனால் தீவிரவாதிகள் முகாமிற்குள் பதுங்கியிருந்து கொண்டு மறைமுகத்தாக்குதல் நடத்தினர். அப்போது ஒரு தீவிரவாதி உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்து சதைத் துண்டங்களாக வெடித்துச் சிதறினான். அவரின்துஉடலை அடையாளங்காண முடியவில்லை. இந்தத் தாக்குதலில் இரண்டு கொமாண்டோ வீரர் உட்பட மூன்று வீரர்கள் பலியாகினர். மற்றொரு தீவிரவாதியைப் பிடிக்க நள்ளிரவு முழுவதும் சண்டை நடந்தது. இறுதியில் 12.00 மணிநேரப் போராட்டத்திற்குப் பின்னர் நேற்றுக் காலை மற்றொரு தீவிரவாதியைப் பாதுகாப்புப் படையினர் சுட்டு வீழ்த்தினர். இத்தாக்குதலில் மேலும் 5 வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர். சம்பவம் குறித்து சி.ஆர்.பி.எப் உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில்; அல்-மன் சூரியன் என்ற அமைப்பைச் சேர்ந்த இரண்டு தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் டால் ஏரி முகாம் மீது திடீர்த் தாக்குதல் நடத்தி பெரும் சேதத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவித்தார். கடந்த சில மாதங்களில் டால்ஏரி சி.ஆர்.பி.எப் முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய மூன்றாவது தாக்குதல் இது. ஏற்கனவே நடந்த இரண்டு தாக்குதல்களில் 19 வீரர்கள் பலியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அங்கிருந்து நேற்று முன்தினம் இரவு சென்னை விமான நிலையம் கொண்டு வரப்பட்டது. அவரது உடலுக்கு சென்னை விமான நிலைய மேலாளர்கள் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் அஞ்சலி செலுத்தினர். பின்னர் ஆனந்தனின் உடல் அவரது சொந்த ஊரான வேலூருக்குக் கொண்டு செல்லப்பட்டது.



சிறிநகரில் தற்கொலைத் தாக்குதல் நடந்ததையடுத்து முகாம் திரும்பும் இந்தியப் படையினர்.

சி.ஆர்.பி.எப் முகாம் தாக்குதலில் உயிரிழந்த மூன்று வீரர்களில் ஒருவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆனந்தன் (வயது-42) என்று தெரிய வந்துள்ளது. இவர் சென்னை விமான நிலையத்தில் மத்திய பாதுகாப்புப் படைத் துணைக் கொமாண்டோவாகப் பணியாற்றி வந்தவர். கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் தான்கொமாண்டோவாகப் பதவி உயர்வுபெற்று காஷ்மீர் மாநிலத்தில் பணியில் அமர்த்தப்பட்டார். ஆனால் நேற்றைய தீவிரவாதத் தாக்குதலில் அவர் பரிதாபமாகப் பலியானார். அவரது உடல் ஸ்ரீநகரில் இருந்து டில்லிக்கு கொண்டு வரப்பட்டு

## வங்கதேசத்தில் தீவிரவாதிகளின் முகாம் பாகிஸ்தான் உளவுத்துறை ஆதரவு

வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமான தீவிரவாதிகள் வங்கதேசத்தில் முகாம்களை அமைத்து செயற்பட்டு வருகின்றனர். இதற்குப் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவு ஸ்தாபனத்தின் தீவிர ஆதரவு உண்டு என்று திரிபுராமாநில முதல்வர் மாணிக்சர்க்கார் கூறியுள்ளார்.

வடக்குகிழக்குப் பகுதிகளில் தனிநாடு கோரி வரும் தீவிரவாத இயக்கங்களுக்கு ஐ.எஸ்.ஐ பெரிதும் உதவி வருகிறது. அகர் தலாவில் வெள்ளிக்கிழமை மாநாடு ஒன்றைத் தொடக்கி வைத்து உரையாற்றினார். சர்க்கார் அப்போது மேலும் அவர் கூறியதாவது,

இந்தியாவிற்கெதிரான வெளிநாட்டு சக்திகள் நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றன. இத்தகைய முயற்சிகளை தடுத்து நிறுத்தும் காலம் கனிந்துவிட்டது. பின்தங்கிய மாநிலங்களில் போதுமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தாத மத்தியரசும் இதற்கு ஒரு காரணம். மக்களின் அடிப்படை வசதிகள் நிறைவேறாத போது தீவிரவாதிகள் அவர்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். இருப்பினும் வடக்குப் பிராந்தியங்களில் கட்டமைப்பு வசதி ஏற்படுத்த நிபுணர் குழுவை அமைக்க ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் மத்தியரசு நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது என்றார் அவர்.

## இந்தியர் உள்ளிட்ட 54பேர் கிரீஸ் எல்லையில் கைது

கிரீசில் குடியேறுவதற்காக கள்ளத்தனமாக ட்ரக்கில் பயணித்த இந்தியர்கள் உட்பட மொத்தம் 54 பேர் பிடிக்கப்பட்டனர். பாகிஸ்தான், வங்கதேசம் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்குவர். இவர்கள் அனைவரும் மெத்தைகளின் நடுவே ஒளிந்திருந்த போது பிடிபட்டனர். இவர்கள் துருக்கியிலிருந்து கிரீசிற்குள் நுழைந்தனர். எல்லைப்பாதுகாப்புப் படையினர் அலைக்சாண்டரா பொலிஸ் அருகே இவர்களைப்பிடித்தனர். பிடிபட்ட ட்ரக்கின் சாரதி ஸ்தான் புல்லில் இருந்து கிரீஸ் தலைநகர் எதென்சுக்குச் சென்று கொண்டிருந்தார். ஒவ்வொரு பயணியிடமும் ரூபா 18 ஆயிரம் பெற்றுக்கொண்டு அவர்களை ட்ரக்கில் ஏற்றி இருக்கிறார் சாரதி.

## குற்ற வழக்குள்ளவர்கள் தாங்களாகவே விலகிக்கொள்க
### - முன்னாள் முதல்வர் உமாபாரதி

(புதுடில்லி)

குற்றவழக்குகளில் சிக்கியுள்ள அமைச்சர்கள் தாங்களாகவே விலகிக்கொள்ள வேண்டுமென முன்னாள் முதல்வர் உமாபாரதி கேட்டுக்கொண்டுள்ளார். மூவர்ணக்கொடி யாத்திரை மேற்கொண்டுள்ள மத்திய பிரதேச முன்னாள் முதல்வர் உமாபாரதி நேற்று மகாரஷ்டிராவிற்குள் நுழைந்தார். அங்கு அவர் பேசியபோதே குற்றவழக்குகளில் சிக்கியுள்ள அமைச்சர்கள் தாங்களாகவே விலக வேண்டும் அல்லது பிரதமர் அவர்களை தூக்கியெறிய வேண்டுமெனக் கூறினார்.

## அப்துல்கலாம் யோசனைப்படி இந்தியா-தான்சானியா உடன்பாடு

சனாதிபதி அப்துல்கலாம் யோசனைப்படி இந்தியா-தான்சானியா நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. தான்சானியா நாட்டில் இந்திய சனாதிபதி அப்துல்கலாமை கௌரவிக்கும் வகையில் அந்த நாட்டின் அதிபர் பென்சமின் வில்லியம் கபே விருந்து கொடுத்தார். இந்த விருந்தில் மத்திய மந்திரி மீரா குமார், இந்திய பிரதிநிதிகள், தான்சானியா நாட்டு மக்கள் சனநாயகக் கட்சித்தலைவர் மெபோபா முத்தி. ரிசர்வ் வங்கி கவர்னர் பிமல் ஜலான், தான்சானியா நாட்டுப்பிரதமர் மற்றும் அந்த நாட்டு வெளியுறவு மந்திரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விருந்தின்போது இருநாட்டு சனாதிபதிகளும் தான்சாரியா நாட்டு வளர்ச்சித் திட்டங்கள் பற்றி விவாதித்தார்கள். தான்சானியா நாட்டுக்கு ஏற்கனவே வழங்குவதாக அறிவிக்கப்பட்ட நிதியுதவியை எந்தெந்தத் திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடிக்கப்படாததால் அந்த நிதி பயன்படுத்தப்படவில்லை என்ற விபரம் அப்போது தெரியவந்தது. இந்திய உதவியை எந்தெந்த திட்டங்களுக்குப் பயன்படுத்துவது என்பதை முடிவு செய்ய இரு நாடுகளும் இணைந்து ஒரு குழுவை அமைப்பது என்றும், இருநாடுகள் சார்பில் தலா இரண்டு பேர் இந்தக்குழுவில் இடம்பெறுவது என்றும் இந்திய சனாதிபதி அப்துல் கலாம் யோசனை கூறினார். இதைத் தான்சானியா நாட்டு சனாதிபதி ஒப்புக்கொண்டார். ஆபிரிக்க வளர்ச்சித்திட்டம் என்ற புதிய திட்டத்திற்கு இந்திய ரூபாய் 20 கோடி நிதி ஒதுக்குவது என்ற ஒப்பந்தம் கையெழுத்தானது. விவசாயம், சுகாதாரம், உயர்கல்வி, ஆகிய துறைகளில் இந்திய உதவியை எதிர்பார்ப்பதாக தான்சானியா சனாதிபதி பெஞ்சமின் வில்லியம் கபே கூறினார். இந்த உதவியை இந்தியா நிச்சயம் செய்து கொடுக்கும் என்று இந்திய சனாதிபதி அப்துல்கலாம் உறுதி கூறினார். பசுமைப்புரட்சி இந்தியாவில் வெற்றிகரமாக நடப்பது போல தான்சானியா நாட்டிலும் பசுமைப்புரட்சி கொண்டுவர இந்தியாவின் உதவியைப் பெரியளவில் எதிர்பார்ப்பதாக அந்த நாட்டு சனாதிபதி கோரிக்கை விடுத்தார். விவசாயத்துறையில் குறிப்பாக உயர்ரக, பல வகையான அரிசி விளைச்சலுக்கும் இந்தியா மருந்து மற்றும் மருத்துவ உதவிகளையும் தான்சானியா நாடு எதிர்பார்க்கிறது என்றும் அந்நாட்டு சனாதிபதி கூறினார். ஆபிரிக்கா நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா செய்யும் என்றும், ஆபிரிக்காவை முன்னேற்ற வேண்டுமென்ற இந்திய வெளியுறவுக் கொள்கை அடிப்படையில் தான்சானியா நாட்டு வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்படுமென்று சனாதிபதி அப்துல் கலாம் கூறினார். தான்சானியா நாட்டின் அண்டை நாடுகளில் இனப்படுகொலைகள் அதிகளவில் நடப்பதால் தான்சானியா நாட்டுக்கு வரும் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்தப் பிரச்சினை குறித்து இருநாட்டு சனாதிபதிகளும் ஆலோசனை செய்துள்ளனர்.



பம்பாய்க்கு 250 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பஞ்வாட் எனுமிடத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தும் மக்கள் மீது தடியடிப்பிரயோகம் நடத்தும் இந்தியப் பொலிசார்.

## வேலைவாய்ப்பிற்கு அனுப்பப்படும் இந்தியப்பெண்கள்விபச்சாரத்தில்
### - தூதரக அதிகாரி தகவல்

டுபாயில் வீட்டுவேலைக்கு ஏற்பாடு செய்வதாக கூறி இந்தியாவில் இருந்து இளம்பெண்களை அனுப்பி வைக்கும் ஏஜெண்டுகள் அவர்களை விபச்சாரத்தொழிலில் ஈடுபடுத்தி வருகின்றனர். ஆந்திரா மற்றும் கேரளத்திலிருந்து டுபாய்க்கு அனுப்பிவைக்கப்பட்ட இரு பெண்கள் விபச்சாரத் தொழிலில் இருந்து மீட்கப்பட்டனர்.

இந்தியாவிற்கு வருவதற்கான ஆவணங்களை எதிர்நோக்கி அவர்கள் காத்திருக்கின்றனர்.

இத்தகவலை டுபாயில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் கேரளத்தைச் சேர்ந்த ஏஜெண்டுகள் சிலர் ஆந்திரா, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த இளம் பெண்களை டுபாயில் வீட்டுவேலைக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறி அனுப்பி வைக்கின்றனர். அந்தப்பெண்கள் அங்கு சென்றவுடன் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

## பாபர் மசூதி இடிப்பில் அத்வானிக்குப் பங்கு அமெ.செய்தியாளரை விசாரிப்பின் தெரியவரும்
### - அமைச்சர் லல்லுப்பிரசாத்

(புதுடில்லி)

அயோத்தியில் சர்ச்சைக்குரிய கட்டமான பாபர் மசூதி இடிக்கப்பட்டமை தொடர்பாக விசாரித்து வரும் குழு அமெரிக்கப் பத்திரிகையாளர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யவேண்டுமென்று ரயில்வே அமைச்சர் லல்லுபிரசாத் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் அந்தக் கட்டடம் இடிக்கப்பட்ட போது குறிப்பிட்ட இந்த இரண்டு செய்தியாளர்களும் உடன் இருந்து சம்பவங்களைக் கவனித்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார். இவர்களிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் அந்தச் சம்பவத்தில் முன்னாள் துணைப்பிரதமர் அத்வானிக்கும், மத்தியப் பிரதேசமுன்னாள் முதல்வர் உமாபாரதிக்கும் உள்ள பங்கினை வெளிக்கொண்டுவரும் என்றும் அவர் கூறினார். இது பற்றி பா.ஜ.கட்சித்தலைவர் வெங்கையா நாயுடுவிடம் செய்தியாளர்கள் கேட்டபோது லல்லுப்பிரசாத்தின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களுக்கு தாம் பதிலளிக்க விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004

International Cricket Council

# கிளஸ்பி, கஸ்பரோவிக் அபார பந்து வீச்சு

# அமெரிக்காவுக்கு மீண்டும் படுதோல்வி









ஐ.சி.சி மினி உலகக்கிண்ண போட்டியில் ஐக்கிய அமெரிக்காவை எதிர்த்தாடிய கிரிக்கெட்டின் வல்லரசு என வர்ணிக்கப்படும் அவுஸ்திரேலியா சாதனையுடன் கூடிய வெற்றியைப் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் அமெரிக்க அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய அமெரிக்க அணி 24 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்ளை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் மஸ்சியா 23 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். மற்றைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்க எண்ணிக்கையை கூட பெறாது ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் கஸ்பரோவிக்கி, ளெஸ்பி தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இப்போட்டியில் மெக்கிராத்தால் ஒரு விக்கெட்டைத்தானும் கைப்பற்ற முடியவில்லை.

பதிலுக்கு இலகுவான வெற்றி இலக்கை நோக்கி ஆடிய அவுஸ்திரேலிய அணி 7.5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் கில்கிறிஸ் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும் ஹெய்டன் 17 பந்துகளை சந்தித்து 23 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 11 ஓட்டங்கள் அமெரிக்க அணியால் விட்டுக்கொடுக்கப்பட்டது. வீழ்த்தப்பட்ட விக்கெட்டை ஜோன்சன் கைப்பற்றினார். மேற்படி தோல்வி மூலம் இப் போட்டித் தொடரில் இருந்து வெளியேறும் முதலாவது அணியாக அமெரிக்கா விளங்கிறது.

சகல துறைகளிலும் தானே முன்னிற்க வேண்டுமென அமெரிக்கா கிரிக்கெட்டிலும் தன்னை நுழைத்துக்கொள்ள விரும்பியது. இதன் காரணமாக ஐ.சி.சி யின் மினி உலகக்கிண்ணப் போட்டிக்குள் நுழைந்தது. முதலாவது போட்டியில் நியூசிலாந்திடம் 210 ஓட்டங்களால் தோற்றுப் போனது இதில் நியூசிலாந்து 347 ஓட்டங்களைப் பெற்றது. இதுவே ஐ.சி.சி மினி உலகக்கிண்ணப் போட்டியில் இதுவரை பெறப்பட்ட அதிகபட்ச ஓட்டமாகும்.

நேற்றைய அவுஸ்திரேலிய அணியுடனான போட்டியில் பெற்ற 65 ஓட்டங்களே ஆகக்குறைந்த ஓட்டங்களாகும் இப் போட்டி 31.5 ஓவர்களில் நிறைவுக்கு வந்தமை ஐ.சி.சி மினி உலக்கிண்ணப் போட்டியில் புதியசாதனையே.

இந் நிலையில் தனது கன்னி பிரவேசத்தை மேற்கொண்ட அமெரிக்கா வேதனையுடனான சாதனையுடன் 2004 ஐ.சி.சி சம்பியன் கிண்ணப் போட்டியில் இருந்து வெளியேறியது.

## தவறிழைத்தது கென்ய அணி
## பாகிஸ்தானை எதிர்பார்த்துள்ளோம்


கும்ளே

எந்த ஒரு தொடரையும் வெற்றியுடன் துவக்குவது மகிழ்ச்சியானவிடயம். கென்யாவுக்கு எதிராகக் கிடைத்த வெற்றி நமது நம்பிக்கையை மேலும் அதிகரித்துள்ளது.என இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் கும்ளே தெரிவித்தார்.நாணய சுழற்சியில் வென்ற கென்யா துடுப்பாட்டத்தை தேர்ந்தெடுக்கும் என்று நம்பினோம்.காரணம்,இந்த ஆடுகளத்தில் முதலில் துடுப்பெடுத்தாடி 200,அதற்கு அதிகமான ஓட்டங்களை எடுத்து விட்டால் போதும் எதிரணிக்கு நெருக்கடி கொடுக்க முடியும்.

ஆனால் என்ன காரணமோ நமக்கு துடுப்பாட்ட வாய்ப்பை வழங்கியது கென்யா, அதற்கான பலனையும் அனுபவித்தது.

இந்தப்போட்டியில் சவுரவ் ஆட்டத்தை கட்டாயம் பாராட்ட வேண்டும்.லட்ஸ்மனுடன் இணைந்து அவர் எடுத்த ஓட்டங்கள் தான் அணிக்கு அத்திவாரம். அவர் விளையாடிய போது,250 ஓட்டங்களை அணி எட்டும் என்று எதிர்பார்த்தோம்.ஆனால்,கைப்-ராகுல் ஜோடியின் அதிரடி ஆட்டம் ஓட்ட எண்ணிக்கையை எங்கையோ கொண்டு போய் விட்டது. இந்த வெற்றி தந்த நம்பிக்கையுடன், பாகிஸ்தானைச் சந்திக்கக் காத்திருக்கிறோம் எனவும் கும்ளே தெரிவித்தார்.




### சர்ச்சை

ஐ.சி.சி. சம்பியன் போட்டியில் அமெரிக்க அணி இடம் பிடித்தமை சர்ச்சையை கிளப்பியுள்ளது.ஸ்கொட்லாந்து எத்தியோப்பியா போன்ற அணிகளுக்கு முறையான வாய்ப்புக் கொடுக்காமல் அமெரிக்காவிற்கு பின்கதவு வழியாக ஐ.சி.சி. வாய்ப்பு கொடுத்துவிட்டதாக முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர் மைக் ஆதர்ட்டன் சாடியுள்ளார்.

இந்நிலையில், ஐ.சி.சி. கிண்ணப் போட்டியில் அமெ ரிக்க அணியின் படுதோல்வி மைக் ஆதர்ட்டனின் கருத்தை வலுவாக்கியுள்ளது.

## கென்ய அணியைத் தோற்கடித்தது போல் பாகிஸ்தானையும் தோற்கடிப்போம்

### கங்குலி



கங்குலியுடன் ஹைப்


மினி உலகக் கோப்பையில் கென்ய அணியைத் தோற்கடித்தது போல் பாகிஸ்தான் அணியையும் வீழ்த்துவோம் என்று இந்திய அணித் தலைவர் கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மினி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது தொடக்க ஆட்டத்தில் 98ஓட்ட வித்தியாசத்தில் கென்யாவைத் தோற்கடித்தது. இந்தியாவின் வெற்றி குறித்து பின்னர் கப்டன் கங்குலி நிருபர்களிடம் தெரிவிக்கையில்; இந்திய அணி மீண்டும் நல்ல நிலைக்குத் திரும்பியுள்ளது. கென்யாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய வீரர்களின் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. நானும் லட்சுமனும் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினோம் ராவிட்டும், கயூப்பும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக்குவித்தது மகிழ்ச்சியளிக்கிறது.

கடந்த இரண்டு ஆட்டங்களிலும் 90 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சதம் அடிக்க முடியாமற் போனது வருத்தமளிக்கிறது எனத் தெரிவித்த அவா், பாகிஸ்தானை அடுத்த ஆட்டத்தில் எதிர் கொள்கிறோம். சவால் நிறைந்த இந்த ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர் கொள்ளத் தயாராகவுள்ளோம். கென்யாவுக்கு எதிராக ஆடியதுபோல் இந்த ஆட்டத்தில் சிறப்பாக ஆடி வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

### யு. எஸ். ஓபன் டென்னிஸ்

## ஆடவர் ஒற்றையர் பட்டத்தை ரோஜர் பெரெடர் கைப்பற்றினார்



யு.எஸ். ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் சம்பியன் பட்டத்தை சுவிற்சர்லாந்தின் வீரரும், உலகின் முன்னணி வீரருமான ரோஜர் பெரெடர் வென்றெடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தம்மை எதிர்த்து ஆடிய அவுஸ்திரேலியாவின் லெயிட்டன் ஹெவிட்டை 6-0,7-6,6-0 என்ற நேர் செட் கணக்கில் தோற்கடித்தார்.


ரோஜர் பெரெடர் தொடர்ச்சியாக விம்பிள்டன் டென்னிஸ், அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ், அமெரிக்க ஓபன் டென்னிஸ் ஆகியவற்றில் சம்பியன் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1988ஆம் ஆண்டுக்குப்பின்னர் ஒரு ஆண்டில் தொடர்ச்சியாக மூன்று விம்பிள்டன் பட்டங்களை வென்றவர் என்ற சாதனையை பெரெடர் பெற்றுள்ளார்.

## சானியா மிர்ஸா கனவு தகர்ந்தது

தாஷ்கன்டில் நடைபெற்ற ஆசிய டென்னிஸ் சம்பியன் போட்டியில் 17வயது இந்திய வீராங்கனை சானியா மிர்ஸாவின் பட்டக்கனவு தகர்ந்தது. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சானியா மிர்ஸா 2-6, 1-6 என்ற நேர் செட்களில் சீன வீராங்கனை நாலியிடம் அதிர்ச்சித் தோல்வியுற்றார். 'இம்மாதிரி அபாரமாக எதிராளி விளையாடுவார் என நான் எதிர்பார்க்கவே இல்லை. அவர் என்னை விளையாடவே விடவில்லை. எப்படி எனது முயற்சியைத் தகர்த்தார் என்பதை விவரிக்கக் கூடத் தெரியவில்லை' எனத் தோல்விக்குப்பின்னர் சானியா கூறியுள்ளார்.

## முன்னாள் கால்பந்து ஜாம்பவான் மரடோனா மீண்டும் வைத்தியசாலையில்




உயர் இரத்த அழுத்தம் காரணமாக ஆர்ஜென்டீனா கால்பந்து ஜாம்பவான் டீகோ மரடோனா (வயது-43) சனிக்கிழமை பியூனஸ் அயர்ஸில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு முதல்நிலை சிகிச்சை அளிக்கப் பட்டதும் பியூனஸ் அயர்ஸின் மேற்கே உள்ள போதை மருந்து புனர் வாழ்வு மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டார். இதயம் மற்றும் நுரையீரல் பிரச்சினை காரணமாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் சாவின் விளிம்பிற்கே சென்ற மரடோனா உயிர்பிழைத்தது குறிப்பிடத்தக்கது. 1986இல் உலகக் கோப்பையை ஆர்ஜென்டீனா வென்றபோது அணியை வழிநடத்திச் சென்றவர் மரடோனாவே.

### முதல் போட்டியில் சிறிலங்கா

ஐ.சி.சி மினி உலகக் கிண்ணப் போட்டியின் முதலாவது லீக் ஆட்டத்தில் சிறிலங்கா அணி சிம்பாப்வே அணியை இன்று எதிர்கொள்கின்றது.

மிகவும் பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் இப்போட்டி ஏற்கனவே இங்கிலாந்து அணியுடனான போட்டியில் தோல்வியடைந்துள்ள சிம்பாப்வே அணிக்கு முக்கியமான போட்டியாக அமைந்துள்ள அதே வேளை, சிறிலங்கா அணிக்கு மிக முக்கிய போட்டியாக அமைந்துள்ளது.



30ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்ற வடக்கு-கிழக்கு மாகாண மகளிர் கால் பந்து அணி நேற்று கிளி. அரச அதிபரால் அரச செயலகத்தில் வரவேற்று கௌரவிக்கப்பட்டபோது. இவ் அணியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வீராங்கனைகள் கூடுதலாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம் - வரன்)

## போட்டி நடுவருடன் சர்ச்சை கால்பந்துப் போட்டி கைவிடப்பட்டது


அகில இலங்கை கால்பந்து சம்மேளனம் நடாத்தும் கால்பந்து சுற்றுப்போட்டி நேற்று மன்னாரில் நடைபெற்றது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடந்த இப்போட்டியில் கொழும்பு பாணந்துறை விளையாட்டுக் கழகமும், மன்னார் சென்லூசியா அணியும் மோதின.

இரு அணிகளும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் கோல் எதனையும் போடாததால் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க தண்ட உதை வழங்கப்பட்டது.

இதில் சென்லூசியா அணி இரு கோல்களைப் போட்டு முன்னிலை வகித்தபோதும், போட்டி நடுவருடன் ஏற்பட்ட சர்ச்சை காரண மாக போட்டி இடை நடுவில் கைவிடப்பட்டது.

இதன் போது பாணந்துறை அணி மைதானத்தை விட்டு வெளியேறி விட்டதாகவும் மேற்படி போட்டி முடிவு உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் அறிவிக்கப்படும் எனத் தெரியவருகிறது. (மி)



### சிந்தனைக்கு

நாம் ஒருவரையும் ஏமாற்றவும் இல்லை, துரோகம் இழைக்கவும் இல்லை, ஆனால் எம்மையாரும் ஏமாற்றினால் அல்லது எமக்குத் துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்க மாட்டோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 14-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## சமாதானத்திற்கு விரோதமானது!

அமெரிக்கா, ஜப்பான் அதைத் தொடர்ந்து நோர்வே என நாடுகள் சிறிலங்கா அரசிற்கு நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளமை சனாதிபதி சந்திரிகாவிற்கு சற்று உற்சாகம் அளிக்கும் ஒன்றாகவே நிச்சயம் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இது பெரும் பொருளாதார நெருக்கடியில் தத்தளித்துக் கொண்டிருக்கும் சந்திரிகா அரசாங்கத்திற்கு, மூழ்கிக் கொண்டிருந்தவருக்குக் கட்டை ஒன்று கிடைத்தது போன்றதாகும்.

சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு இந்நிதியினை வழங்குவதற்கு இந்நாடுகள் பல காரணங்களைக் கூறிக் கொள்ளலாம். இதில் ஒன்றாக சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளை முன்னெடுக்கத் தயாராக இருப்பதால் அரசாங்கத்தின் உடனடித்தேவைகளுக்காகவும் அரசாங்கத்தைச் சீராக நடத்துவதற்கும் இந்நிதியுதவி அவசியம் என்றும் கூடக் கூறிக்கொள்ளலாம்.

இதேவேளை சிறிலங்கா அரசிற்கு சர்வதேச சமூகம் அளிக்க முன்வரும் நிதயுதவிகள் குறித்து தமிழர் தரப்பில் இருந்து கருத்தெதுவும் எதிர்பார்க்கப்படப் போவதுமில்லை. அவ்வாறு கருத்தேதுவும் கூறப்பட்டாலும் கூட அவை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதும் தமிழர் தரப்பிற்குத் தெரியும்.

ஆனால் ஒன்று மட்டும் தமிழர் தரப்பால் கூறமுடியும்; அதாவது அரசாங்கத்திற்கு அளிக்கப்படும் நிதியுதவி என்பது சமாதானத்திற்கு எதிரான உதவி என்பதே ஆகும். இதனைச் சில வேளை நிதியுதவி அளிப்போர் தெரிந்தும் செய்யலாம; அவர்கள் கூறுவது போன்று வேறு எதிர்பார்க்கைகளின் அடிப்படையிலும் செய்யலாம்; ஆனால் தெரிந்து செய்தாலும் வேறு நோக்கத்திற்காகச் செய்தாலும் முடிவொன்றே. அதாவது சமாதானத்திற்கு எதிரானது என்பதே.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்துவரினும், அது அவரின் செயற்பாட்டிற்கும், யதார்த்தத்திற்கும் மாறானது என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றே. அதாவது சனாதிபதி சந்திரிகா, துரிதமாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சி எதுவும் எடுக்கவில்லை.

மாறாகக் காலத்தைக் கடத்தும் வகையிலான செயற்பாட்டிலேயே ஈடுபட்டுள்ளார். இதுவரையும், அதாவது ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஐந்து மாதங்கள்வரையில் ஏதோவகையில் பேச்சுவார்த்தையை இழுத்தடிப்புச் செய்து வந்த சனாதிபதி சந்திரிகா, தற்பொழுது தேசிய ஆலோசனைக் குழு அமைப்பது குறித்துப் பேசத் தொடங்கியுள்ளார்.

இத் தேசிய ஆலோசனைக்குழு அமைக்கும் விடயமானது சமாதானப் பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்பதற்கானதொரு மார்க்கம் என ஏற்கனவே எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினாலும். தமிழர் தேசியக்கூட்டமைப்பினாலும் நிராகரிக்கப்பட்டுள்ளது. வட்டமேசை மாநாடு ,சர்வகட்சிகளின் கூட்டம் பாராளுமன்றத் தெரிவு என்பனவற்றின் அனுபவங்கள் இத்தகைய நிராகரிப்பிற்கு அடிப்படையாகியுள்ளது.

இது ஒரு புறம் இருக்க, விடுதலைப்புலிகளினால் முன் வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைநகல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை நடத்துவதற்குப் பிரதான எதிர்கட்சியான ஐ.தே.கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இதனையே வலியுறுத்திவருகின்றனர். இந்நிலையில் அரசாங்கம் தேசிய ஆலோசனைச் சபை ஒன்றை அமைப்பதென்பது காலத்தை இழுத்தடிப்பதற்கானதாக இல்லாது வேறு எவ்வாறு இருக்க முடியும்?.

சிறிலங்கா அரசைப் பொறுத்து மீண்டும் ஒரு தடவை இராணுவத்தீர்விற்கு முயற்சித்தால் என்ன? என்ற அளவிற்கு அதன் நம்பிக்கை வளர்ச்சி கண்டுள்ளது. அதாவது இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்ற சர்வதேசத்தின் அழுத்தத்தில் இருந்து விடுபட முடியும் என அது நம்புவது போல உள்ளது. இதற்கு இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தில் உலக மற்றும் பிராந்திய வல்லரசுகள் காட்டும் அக்கறையும் அவை இராணுவ-பொருளாதார ரீதியில் அளிக்க முன் வந்துள்ள உதவிகள் என்பனவும் இந் நம்பிக்கையைக் கொடுத்திருத்தல் வேண்டும்.

இவை இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு வேண்டிய தேவை தற்போதைக்கு இல்லை என்ற தீர்மானத்துடன் செயற்பட அரசாங்கத்திற்குப் போதுமானவையாகும். அதாவது டோக்கியோ நிதியுதவி கிடைக்காது போனதும், கிடைக்கப் பெறும் நிதியுதவி நெருக்கடியைப் போக்குவதற்கும் போதுமானதாக இருப்பின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் அரசாங்கத்திற்குத் தேவையற்ற தொன்றாகி விடும்.

அத்தோடு அதுவே அரசாங்கத்தை ஸ்திரமானதாக்கிவிடவும் கூடும் அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட ஜே.வி.பி.யை சனாதிபதியின் இத்தகைய போக்கு திருப்தி அடைய வைத்துவிடக்கூடும். இதன் மூலம் சமாதானத்திற்கெதிரான அரசாங்கம் ஒன்று வலுவுடைய வாய்ப்பாகி விடும். இதன் அடுத்த கட்டமாக யுத்த நிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர அது முனையக்கூடும்.

-புலிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டுமென-

# சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதிக்கக்கூடாது

## ஜே.வி.பி.வலியுறுத்துகிறது

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவி வழங்கும் போது விடுதலைப்புலிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கக் கூடாதென ஜே.வி.பி.சர்வதேச நாணய நிதியத்திடம் கேட்டுள்ளது.

இவ்வாறு விதிக்கப்படும் நிபந்தனைகள் இந்நாட்டின் அரசியல் சுதந்திரத்திற்கு பாதிப்பாக அமையும் எனவும் ஜே.வி.பி மேலும் கூறியுள்ளது.சர்வதேச நாணயம் நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதி நிதி ஜே.வி.பி.யின் பிரதிநிதிகளை ஜே.வி.பியின் தலைமைக்காரியாலயத்தில் சந்தித்து உரையாடிய போதே இந்தக் கருத்தை ஜே.வி.பி. முன்வைத்துள்ளது. ஜே.வி.பி.யினர் பிரதேச செயலாளர் விமல்வீரவன்ச அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் இந்தச் சந்திப்பின் போது கலந்து கொண்டனர்.

(முன்னைய செய்தி 8ஆம் பக்கத்தில்)

## "ஹொலிவூட் புத்தாவை" தடைசெய்யக்கோரி நேற்றும் அமெ. தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பௌத்த மதத்தை இழிவுப்படுத்தும் வகையில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி வெளியிடப்படவுள்ள ஹொலிவூட் புத்தா என்ற திரைப்படத்தை தடை செய்யுமாறு கோரி அமெரிக்க அரசாங்கத்தை வலியுறுத்தி நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது கொழும்பு பம்பலபிட்டியில் இருந்து ஊர்வலமாக அமெரிக்க தூதரகத்துக்கு சென்ற தேசிய சங்க சபையின் பௌத்தபிக்குமார் அங்கு இது தொடர்பில் மனு ஒன்றை கையளித்தனர். நேற்று முன்தினம் இது சம்பந்தமான ஆர்ப்பாட்டம் ஒன்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் முன்னிலையில் நடத்தப்பட்டது. (32)

## இ.தொ.கா. அமைச்சரும், பிரதியமைச்சரும் நடந்துகொண்ட விதம் குறித்து சனாதிபதியிடம் முறைப்பாடு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தில் இணைந்து கொண்ட பின்னர் அதன் பாராளுமன்ற உறுப்பினர் முத்துசிவலிங்கம் அமைச்சராகவும், எம்.எஸ். செல்லச்சாமி பிரதியமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் நடந்து கொண்ட விதம் குறித்து சனாதிபதியிடம் முறையிடப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடுகளை முன்னாள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சி.பி. ரட்நாயக்க மற்றும் பிரதியமைச்சர் சந்திரசேன ஆகியோர் செய்துள்ளனர். குறிப்பட்ட இருவரும் அமைச்சர்களாகவும், பிரதியமைச்சர்களாகவும் கடந்த வெள்ளிக்கிழமை பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் அன்று மாலையே அமைச்சகங்களுக்கு சென்று தமது பொறுப்புககளையும் ஏற்றுக் கொண்டனர். எனினும் அந்த நேரம் வரை முன்னாள் அமைச்சர்களான சி.பி.ரட்நாயக்கவுக்கும், பிரதியமைச்சர் சந்திரசேனவுக்கும் தமது பொறுப்புகளுக்கு வேறு இருவர் நியமிக்கப்பட்டுள்ள விடயம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் புதிய அமைச்சரும், பிரதியமைச்சரும் தமது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட போது முறைப்படி நடந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து சனாதிபதி தரப்பு தெரிவிக்கையில், விடயம் சனாதிபதியினால் அறிவிக்கப்பட்ட போதும் அவரின் செயலகம் அதனை நடைமுறைப்படுத்தவில்லை எனக் கூறியுள்ளது. (32)

## அரசாங்க எழுது வினைஞர்கள் வெற்றிடங்கள் நிரப்பமுடிவு

அரசாங்க சேவையில் எழுதுவினைஞர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது . இதன் அடிப்படையில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 9ஆம் திகதி வரை நேர்முகப் பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளன. மொததமாக 2806 எழுதுவினைஞர்கள் அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனா. இதில் 3 வீதம விசேட தேவையுடையவ்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த எழுதுவினைஞர் களுக்கான புள்ளிகள் தெரியப் படுத்தப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது (32)

## தனது மகனைப் பொலிசார் காரணமின்றி சுட்டுக்கொன்றதாக தந்தை முறைப்பாடு

### உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு இணக்கம்

பொலநறுவை கெப்பிட்டிகொல்லாவ பகுதியில் தமது மகனை பொலிசார் கடந்த மாதம் எவ்வித காரணமும் இன்றி சுட்டுக் கொன்றமை தொடர்பில் தந்தை ஒருவர் உயர் நீதிமன்றத்தில் எழுத்து மூல முறைப்பாட்டை செய்துள்ளார். எனினும் இதனை அடிப்படை உரிமைமீறல் மனுவாக வடிவமைத்து அதன் அடிப்படையில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள பிரதம நீதியரசர் இணங்கியுள்ளார். பொலிசாரின் அத்துமீறல்கள் தொடர்பாக முறைப்பாட்டை செய்தமை காரணமாகவே தமது மகனை பொலிசார் தமது சோதனைச் சாவடியின் அருகில வைத்து சுட்டுக் கொன்றதாக முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (32)

## தமிழகத்திலுள்ள தமிழ் அகதிகளை விமானம் மூலம் அழைத்துவர முயற்சி

அகதிகளாக தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கையரை விமானமூலம் அழைத்துவர அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் முன்வந்திருப்பதாக சனாதிபதியின் ஊடகப் பேச்சாளரும், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு விவகாரங்களுக்கான சனாதிபதியின் ஆலோசகருமான ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டிற்கான ஒரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்திருந்த அவர் யாழ்.செயலகத்தினில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். அங்கு எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கே மேற்பட்ட தகவலை வெளியிட்ட அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்; "விமான மூலம் வருடந்தோறும் 5000 அகதிகளை தாயகம் திருப்பியழைத்துவர அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் முற் பட்டுள்ளது. எனினும் தமிழ் நாட்டில் சுமார் 60 ஆயிரத்திற்கும் அதிகமான அகதிகள் வாழ்ந்து வருகின்ற நிலையில் இத்திட்டம் நிறைவேற நீண்ட காலம் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு அவர்களை வருடத்திற்கு 10000 அகதிகளையாவது அழைத்து வருமாறு கோரியுள்ளோம்


பயணி ஒருவர் 20 கிலோகிராம் நிறையுடைய பொதிஒன்றை விமான மூலம் எடுத்துவர முடியும். அவர்களது உடமைகள் கொள்கலன்கள மூலம் கப்பலில் எடுத்து வரமுடியும் இதேவேளை அகதிகள் தாயகம் திரும்பும் பணியைத் துரிதப்படுத்த சென்னையில் உள்ள சிறிலங்காத் தூதுவராலயத்திற்கு மேலதிக அதிகாரிகள் அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

இந்நிலையில பாதுகாப்பற்ற படகுகளில் கடல்வழியாக அகதிகள் தாயகம் திரும்புவதை தவிர்க் குமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (27)

# ஹரீம் பீரிஸ் நேற்று யாழ்.வருகை

## படைத்தரப்பு உட்பட பலருடன் சந்திப்பு

யாழ்.குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு




நேற்று வருகை தந்திருந்த சனாதிபதியின் ஆலோசகரும், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு செயலாளருமான ஹரீம் பீரிஸ் பலாலி இராணுவத் தளத்தில் படை அதிகாரிகளுடனான முக்கிய சந்திப்பொன்றினை காலை நடாத்தியுள்ளார்.

பின்னர் அங்கிருந்து யாழ்.நகரப்பகுதிக்கு விஜயம் செய்திருந்த அவர் குருநகர் கரையோரப் பகுதிகளுக்கும் யாழ்.அரச அதிபர் சகிதம் விஜயம் செய்தார். குருநகர்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டம் மற்றும் 5மாடி வீட்டுத்திட்டம் என்பவற்றை அவர் பார்வையிட்டார்.

அதைத் தொடர்ந்து நாவற்குழி வீடமைப்புத் திட்டப்பகுதிக்கு வியஜம் செய்த அவர் யாழ்.கண்டி வீதியினில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கைதடி மற்றும் நாவற்குழி பாலங்களையும் பார்வையிட்டார்.

பிற்பகல் 4.00 மணியளவில் யாழ்.செயலகத்திற்கு விஜயம் செய்த அவர் அரச அதிபர் செ.பத்ம நாதன் தலைமையில் செயலக அதிகாரிகளை சந்தித்துப் பேச்சுக் களை நடத்தினார். அதைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றங்களது செயலாளர்கள் மற்றும் விசேட ஆணையாளர்களை அவர் இரண்டாவது கட்டமாகச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

(27)

### மின்சாரம் தடைப்படும்

மின்மாற்றித் திருத்தம் காரணமாக இன்று ஏ-9 வீதியில் டிப்போச் சந்திக்கருகில் உள்ள கலாசார மண்டபத்திலிருந்து வலயக்கல்விப் பணிமனைக்கிடையில் காலை 7 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை மின்சாரம் தடைப்படுமென மின்சார சபையினர் வாடிக்கையாளருக்கு அறிவிககின்றனர்.

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் காயம்

### - மட்டு மருத்துவமனையில் அனுமதி

(கொழும்பு)

துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான நிலையில் இளைஞர் ஒருவர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவசர நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

நேற்று நண்பகல் 12.00 மணியளவில் அனுமதிக்கப்பட்ட இவரின் காலின் சூட்டுக்காயம் காணப்பட்டது. சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட இவர் பொலிசாரின் பாதுகாப்புடன் அவசர பாதுகாப்புடன் அவசர நோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

இவரது பெயர் ஈழப்பிரியன் என மருத்துவமனைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஹொலிவூட் தயாரிப்பான "ஹொலிவூட் புத்தா" என்ற திரைப் படத்துக்கு எதிராக கொழும்பு அமெரிக்கத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

### இலங்கையின்...

சந்தித்துப் பேசியுள்ளார். இதே வேளை இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருட்பிரகாஷ் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்று சந்தித்து உரையாடியுள்ளார்.

நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இவர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து உரையாடியுள்ளார். சனாதிபதியுடனான சந்திப்பு சுமுகமாக நடைபெற்றதாகவும் இதன்போது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடனும் இந்தியக் கடற்படைத் தளபதி உரையாடியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இரத்தினசிறி விக்கிரமநாயக்கவையும் இவர் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ஹேரத், இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமாராவ் ஆகியோரும் உடனிருந்தனர். இதன் பின்னர் நேற்றுப் பிற்பகல் இலங்கைக் கடற்படைத் தலைமையகத்திற்கும் விஜயம் செய்துள்ளார். இதன் போது இலங்கை கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல் தயாசந்த கிரியையும் சந்தித்தார்.

பின்னர் இராணுவ தலைமையகம் , விமானப்படைத் தலைமையகத்திற்கும் இவர் விஜயம் செய்துள்ளார்.வரும் 16ஆம் திகதி இந்தியாவுக்குத் திரும்பவுள்ள இவர் இன்றும், நாளையும் அநுராதபுரம், திருகோணமலை, கண்டி ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

### ஆயுதங்களை...

இரண்டாம் லெப்டினன்ட் தர இராணுவ அதிகாரியான மங்கள ரத்நாயக்க என்பவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணம் அடைந்தார். மற்றைய இராணுவ அதிகாரியான இரண்டாம் லெப்டினன்ட் ஜெயக்கொடி கந்தளாய் சீனித் தொழிற்சாலை இராணுவ முகாம் பகுதியில் வைத்து கந்தளாய் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை இவர்களுடன் சென்ற மற்றுமொருவர் தப்பிச் சென்றுள்ளார்.

இதன் போது படுகாயம் அடைந்த ஊர்காவற் படையினரைச் சேர்ந்த சந்தன புஸ்பகுமார குருநாகல் அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி ஆயுதக்கொள்ளைக்குச் சென்ற மூன்று இராணுவத்தினரும் கந்தளாய் சர்வோதயத்திற்குச் சொந்தமான வான் ஒன்றையே தமது தேவைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.இந்த வானை தடுத்துவைத்துள்ள கந்தளாய் பொலிசார் இது தொடர்பாக இரண்டு நபர்களை தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

### நெதர்லாந்து...

மிடையே பலாலியில் இடம்பெற்ற சந்திப்பின்போது,

யாழ்.மாவட்டத்திலுள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களைப் பலப்படுத்துவது, கடற்படையினரது பாதுகாப்புநிலைகளை உசார்ப்படுத்துவதன் மூலம் ஊடுருவல்களைத் தடுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன், யாழில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருடையபாதுகாப்பினைப் பலப்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(33)

### சமாதானச்...

நடைபெற்றுள்ளது.

நேற்று காலை 11.00 மணியளவில் இச்சந்திப்பு நடைபெற்றது இதில் சமாதானச் செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் ஊடகத்துறை இணைப்பாளர் தயாநிதி அவர்களும், மற்றும் தேசிய சமாதானப் பேரவையின் நிமலன் கார்த்திகேயன், நாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தென்இலங்கையில் இருந்து வருகை தந்த 50 ஊடகவியலாளர்களுடனும் புலித்தேவன் தற்போதைய நிலைப்பாடுகள் பற்றியும், சமாதானச் செயலகத்தின் நடவடிக்கைகள் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார்.

மேலும் இவ் ஊடகவியலாளர்கள் நேற்று பரந்தன் இந்து மகா வித்தியாலயம், பரந்தன் மீள் குடியமர்ந்த மக்கள் குடியிருப்பு போன்றவற்றையும் சென்று பார்வையிட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

### தேசிய...

நினைவுரைகளும் இடம்பெறவுள்ளன. அத்துடன் முதல் ஒன்பது நாட்களும் கிராமங்கள் தோறும் சிரமாதானங்கள் கருத்தரங்குகள் கலை நிகழ்வுகளும் இறுதி மூன்று நாட்களும் அடையாள உண்ணாவிரதங்கள் உரைகள் கலைநிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன. இதே வேளை திலீபனின் நினைவுநாளை முன்னிட்டு வீதிகள், பொது இடங்களில் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் முக்கிய இடங்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் விசேட கொட்டகைகள் அமைக்கப்பட்டு நினைவுகூறலுக்கு தயார்படுத்தப்பட்டு வருகின்றன.

### முகமாலை....

திகதி முதல் தமிழீழ நேரப்படி மாலை 6.30 மணிவரை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பொருட்களை யாழ்.குடாநாட்டுக்கு ஏற்றிவரும் பார ஊர்திகளின் தாமதமடைவதைத் தவிர்க்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக ஹரீம்பீரிஸ் தெரிவித்தார். (27,33)

### பிளாக்கின்...

ஊடகவியலாளர் குழு ஒன்றுடன் நடத்திய வட்டமேசைக்கலந்துரையாடல் தமிழ் மக்களிடையே அதிக கவலையை ஏற்படுத்திருக்கின்றது.

"எல்லாத் தரப்புக்களில் உள்ள ஒவ்வொருவரையும் காப்பாற்றுவதே சமாதானத்தின் நோக்கம். அதற்காகவே நாம் முயற்சித்து வருகின்றோம். அதுதான் எமது நோக்கமாகும்" என்று தூதர் பிளாக் தெரிவித்துள்ளார். அரசியல்வாதிகள் உண்மையில் வயது வந்தவர்கள் போன்று இருந்துகொண்டு மக்களைக்காப்பாற்றுவதற்கான தீர்வைக் காணுவதற்குக் காலம் காலமாக பேசிவந்துள்ளார்கள். அப்பாவி ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைக் காப்பாற்றுவது முதலாவது அம்சமாகும் என அவர் மேலும் கூறியிருக்கிறார்.

தூதர் பிளாக்கின் ஒட்டுமொத்தமான நோக்கம் பாராட்டப்படத்தக்கது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

எவ்வாறாயினும், தூதர் பிளாக்கின் கண்டனக்கூற்று, இலங்கையில் காணப்படும் தீங்கான காரியங்கள் அனைத்திற்கும் விடுதலைப்புலிகளே மூலகாரணம் என்ற ஊகத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக மாத்திரமே அமைந்துள்ளது. மிகவும் துரதிஷ்டமானதாகும். இந்த மதிப்பீட்டை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தமிழ் மக்களின் நலன்கள் பாதிக்கப்படாது என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. சுதந்திரம் பெற்ற பின் பல தசாப்த காலமாக வேறு எந்த மக்களிலும் பார்க்கக் கூடுதலாக அப்பாவித் தமிழ் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பின்றி வாழ்கின்றார்கள்.

இலங்கை அரசு இனப்படுகொலைகள் மற்றும் இன ரீதியான தாக்குதல்கள் மூலம் தமிழ் மக்களை அடக்கியாள முற்பட்டது. அப்போதுதான் இலங்கையில் வன்செயல் ஆரம்பமானது.

தமிழ்மக்களின் சட்டபூர்வமான அரசியல் அபிலாஷைகளை ஏற்றுக் கொள்ளத்தவறியதும், தமிழ் மக்களுக்கு எதிராக அரச ஆதரவுடனான பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டதும் தான் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோற்றத்திற்குக் காரணமானது.

தமிழ்மக்கள் தாம் அனுபவித்த பாரிய துன்பங்களை ஆழமாக உணர்ந்து கொண்டுள்ளனர். இந்த யதார்த்த நிலையைப் பிரதிபலிக்காது முக்கிய அதிகாரிகள் வெளியிடும் அறிக்கைகள் தமிழ் மக்கள் மனதைப் புண்படுத்துகின்றன.

தூதர் பிளாக்கின் அறிக்கைகள் அரசாங்கத்தினுள் காணப்படும் சமாதான முயற்சி சம்பந்தமான ஆழமான வேறுபாடுகளை வெளிப்படுத்துவதாக அமையவில்லை; அத்துடன் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு பாரிய முட்டுக்கட்டையாக இருக்கும். ஆழமாக வேரூன்றிய அரசியல் போட்டி மற்றும் முக்கிய அரசியல் கட்சிகளிடையே காணப்படாத இரு தரப்பு அணுகுமுறை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுவதாகவும் இவ்வறிக்கைகள் அமையவில்லை. நோர்வேயின் அனுசரணைப் பங்களிப்புக்குக் கடும் எதிர்ப்புக் காட்டுவது உட்பட பெரும்பான்மை மக்கள் மத்தியில் உள்ள தீவிரமான சக்திகளால் சமாதான நடைமுறைக்கு எதிராக நடத்தப்படும் நச்சுத்தன்மை வாய்ந்த பிரசாரங்களைப் பற்றியும் இவ்வறிக்கைகள் குறிப்பிடவில்லை. அவ்வாறான எதிர்ப்பு பிரசங்கங்களில் நோர்வே நாட்டின் தேசியக் கொடியை எரிப்பது வழமையான நிகழ்வாக மாறிவிட்டது. சமாதான முயற்சியை முன்னெடுத்து செல்வதற்கு இவ்வாறான நடவடிக்கைகள் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் இவற்றை திருத்துவதற்காக அவசிய தேவை ஏற்பட்டுள்ளது என்பது தூதர் பிளாக்கின் அறிக்கைகள் அமையவில்லை. வன்செயலினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள் அவர்கள் வன்செயல் தொடர்வதை ஏற்றுக் கொள்ளவில்லை

சமாதான முயற்சியில் தற்போது ஏற்பட்டுள்ள தடங்களிலிருந்தும், சமாதான நடைமுறையைப் பலவீனப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தின் உள்ளேயும் வெளியேயும் இருந்து செயல்படும் சக்திகளின் முயற்சிகளிலிருந்தும் தற்போது இடம்பெற்று வரும் வன்செயலை தனிமைப்படுத்திவிட முடியாது

அரசாங்கத்தின் அடக்குமுறை இராணுவ இயந்திரத்துக்கு எதிராகக் கடுமையான யுத்தத்தை இரு தசாப்தகாலமாக நடத்திய விடுதலைப்புலிகள் இயக்கம் யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செய்துகொண்டு பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றியதுடன் எழுத்து மூலம் இடைக்கால‌த் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழியை சமர்ப்பித்து அது தொடர்பான பேச்சுவார்த்தையை நடத்தி உடன்பாடு காணுவதற்கு திகதிகளை நிர்ணயிக்கும்படி கோரியிருந்தது. ஆனால் தமிழ்ப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு சிங்கள அரசியல் தலைமைத்துவம் உறுதிபூண்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கான ஊக்கம் விடுதலைப் புலிகளுக்கு அளிக்கப்படவில்லை. சமாதான நடைமுறை வெற்றி பெற வேண்டும் என்ற ஆழமான உறுதிப்பாட்டுடன் இருக்கும் தமிழ்மக்கள் தற்போதைய நிலவரம் தொடர்வது குறித்து உண்மையாக வருந்துகின்றனர்.

ஒரு தரப்பைக் கண்டித்தும் சமாதான நடைமுறையை முன்னெடுத்துச் செல்வதற்குத் தடையாக இருக்கும் பல்வேறு காரணங்கள் குறித்து குறிக்கோளின் அடிப்படையில் கருத்துக்களைக் கூறாது வெளியிடப்படும் அறிக்கைகள் சமாதான நடைமுறையைக் குழப்புவதற்கு திட்டமிட்டுள்ள சக்திகளை ஊக்குவிப்பதாக மாத்திரமே அமையும்

நடுநிலையான அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிக்கத் தவறுவது சமாதான நடைமுறைக்குப் பாரிய தீங்கை விளைவிக்கும் என்பதையும், தூதர்பிளாக் தாம் உறுதியுடன் ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கூறிய சமாதானத்தை அடைவதற்கு கூடுதல்சமநிலை கொண்ட அணுகுமுறை ஒன்று கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதையும் தமிழ் மக்கள் தெரிவிக்கவிரும்புகின்றனர் என சம்பந்தன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.